www.padippakam.com

கடல் : 4 • அலை : 2 நன்கொடை ரூ. 5/-

# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2032 • மீனம்-விடை • கி.பி. 2001 • மார்ச்சு-மே

ஆசிரியர் : தியாகு



தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவில் 42% வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை.

- செய்தி

✱ தடுமாறும் 'தன்னுரிமை' ✱ திருச்சிராப்பள்ளி தந்த திருப்பம்

✱ புலிப் பால் ✱ 'தேர்தல் அறிக்கை' ✱ எது வேண்டும் சொல் பகையே!



படிப்பகம்

www.padippakam.com

# கருத்தியல் வேண்டாமா?

'தலித் முரசு' 2001 மார்ச் இதழில் தியாகி இமானுவேல் பேரவைத் தலைவர் தோழர் பூ. சந்திரபோசு அவர்களின் விளக்கமான பேட்டி கண்டேன். தேர்தல் கூட்டணி, சந்தர்ப்பவாதப் பகட்டு அரசியலுக்கெதிராக தலித் மக்களை அவர் எச்சரித்திருப்பது சரியானதே. தேர்தலைப் புறக்கணிக்க அவர் விடுத்துள்ள அறைகூவல், முழுக்க முழுக்க தலித்தியக் கோணத்திலிருந்து மட்டுமே அமைந்துள்ளது. தமிழ்த் தேசியக் கோணமும் சேர்ந்தால்தான் இந்தப் பார்வை முழுமை பெறும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தலித்தியத்தோடு தமிழ்த் தேசியத்தையும் இரண்டுக்குமான இடையுறவையும் உணர்வு பூர்வமாய் ஏற்றுக் கொள்கிற தோழர் சந்திரபோசு அவர்களிடமிருந்து இந்த முழுமைப்பட்ட பார்வையை எதிர்பார்க்கிறேன்.

எங்களைப் போன்றவர்கள், மேலவளவு போன்ற சாதிக் கொடுமைகளை எதிர்த்துத் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் பெரும்படியாகவும் போராடவில்லை என்பது உண்மைதான். அதே போது, நாங்கள் சாதிக் கொடுமைகளை எதிர்த்து நிலைப்பாடு எடுக்கவே இல்லை, போராடவே இல்லை என்ற தோற்றத்தைக் காட்ட முயல்வது சரியாகாது. காவிரி, பெரியாறு போன்ற உரிமைப் போராட்டங்களையும் கூட, நாங்கள் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் பெரும்படியாகவும் நடத்தி விடவில்லை என்பதே உண்மை. தமிழ் வழிக் கல்வி, இட ஒதுக்கீடு போன்றவற்றிற்காகவும் கூட பெரிய போராட்டம் நடத்தி விட்டதாக நாங்கள் உரிமை கொண்டாட முடியாது. போராட்டச் சுடர் அணைந்து விடாமல் காக்கின்ற அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவையே என்றாலும், விளைவளவில் எல்லாமே அடையாளப் போராட்டங்கள் என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்கிறோம்.

தமிழ்த் தேசியம், சமூக நீதி எனும் குறிக்கோள்கள் வெகு மக்களைப் பற்றிக் கொண்டு பெருந்தீயாக உருவெடுக்கும் காலம் வரும் வரை நமது முயற்சிகளைப் பொறுமையாகவும் உறுதியாகவும் விடாப் பிடியாகவும் தொடர்வது தவிர வேறு வழியில்லை. இந்த நீண்ட நெடிய போராட்டத்தை வழிநடத்த, ஒரு தெளிந்த கருத்தியல் இன்றியமையாத் தேவையாகும். "எங்கள் கொள்கை அம்பேத்கரிசம், பெரியாரிசம், மார்க்சியம்தான்" என்று பிரகடனம் செய்துள்ள தோழர் சந்திரபோசு, கருத்தியலின் தேவையை மறுக்கவோ, குறைத்து மதிப்பிடவோ மாட்டார் என நம்புகிறேன். "தமிழ்த் தேசியவாதிகள் கருத்தியலை மட்டுமே வைத்துக் கொண்டு திரிகிறார்கள்" என்று அவர் சொல்லியிருப்பது வருத்தமளிக்கிறது. தேர்தல் சந்தர்ப்பவாதத்தில் சறுக்கி விழுந்துள்ள தலித் அமைப்புகளைக் குறை கூறும் தோழர் சந்திரபோசு, அவ்வமைப்புகளிடம் ஒரு தெளிந்த கருத்தியல் பார்வை இல்லாமற் போனதும் - இந்தச் சறுக்கலுக்குக் காரணம் என்பதை உணர்ந்துள்ளாரா?

- தியாகு, பொதுச் செயலாளர், தமிழ் தமிழர் இயக்கம்.

நன்றி : தலித் முரசு, ஏப்ரல் 2001

### விடுதலைப் புலிகளுக்கு பிரிட்டன் விதித்த தடையை எதிர்த்து...

## பிரித்தானியப் பண்டங்கள் எரிப்புப் போராட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பிரித்தானியப் பேரரசு விதித்த தடைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முறையில் பிரித்தானியப் பண்டங்களை எரிக்கும் போராட்டம் சென்ற 30-03-2001 காலை சென்னையில் நடைபெற்றது. தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நடைபெற்ற இப்போராட்டத்துக்கு திரு பழ. நெடுமாறன் தலைமை ஏற்றார். த.த.இ. பொதுச் செயலாளர் தோழர் தியாகு உட்பட பல்வேறு இயக்கங்களின் தலைவர்களும் தொண்டர்களும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். காவல் துறையின் தடையை மீறி பிரித்தானியப் பண்டங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. இருநூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் தளைப்படுத்தப்பட்டனர். மதுரை, திருச்சி, நெல்லை உள்ளிட்ட பல்வேறு மையங்களிலும் இப்போராட்டம் நடைபெற்றது.

## வாலாசாவில் மே நாள் பொதுக்கூட்டம்

வேலூர் மாவட்டம் வாலாசாபேட்டையில் சென்ற மே முதல் நாள் மாலை பாவேந்தர் பிறந்த நாள், அம்பேத்கர் பிறந்த நாள், மே நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மார்க்சிய - பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும், தமிழ் தமிழர் இயக்கமும், தமிழ் மன்றமும் இணைந்து நடத்திய இப் பொதுக் கூட்டத்தில் தன்னொளியன் மற்றும் பல தோழர்கள் உரையாற்றினார்கள்.

சந்தர்ப்பவாத அரசியல் கூட்டணிகளைக் கேலி செய்யும்விதத்தில் காஞ்சி கலைக்குழுவினரின் நாடகமும் நடைபெற்றது.

மே நாள் வரலாறு குறித்து தோழர் தியாகு எழுதி தமிழ்த் தேசம் வெளியீடாக வந்துள்ள 'மே நாள் சுவடுகள்' இந்தக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2032 மீனம் - விடை
கி.பி. 2001 மார்ச்சு - மே
கடல் : 4
அலை : 2

எல்லாத் தொடர்புகளுக்கும் :
தமிழ்த் தேசம்,
4, சிறிராமுலு தெரு, வெங்கடாபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600 053.
தொலைபேசி : 6571395

ஆசிரியர் : தியாகு • வெளியிடுபவர் : ச. நாத்திக நந்தனார்

# கழுதைக் கல்யாணம்




நடந்து முடிந்த தமிழக சட்ட மன்றப் பேரவைத் தேர்தலில் ஜெ. தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணி 'அமோக வெற்றி' பெற்றதாக ஏடுகள் சொல்கின்றன. அ.தி.மு.க. அணிக்கு 1.4 கோடி வாக்கு என்றால் தி.மு.க. அணிக்கு 1.08 கோடி வாக்கு கிடைத்திருப்பதாக மு. கருணாநிதி கணக்குச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் இவர்களெல்லாம் ஓர் அடிப்படைச் செய்தியை மறந்து விட்டார்கள். அதாவது அ.தி.மு.க. அணிக்கு வாக்களித்தவர்களைக் காட்டிலும், தி.மு.க, அணிக்கு வாக்களித்தவர்களைக் காட்டிலும் யாருக்கும் வாக்களிக்காதவர்களே பெருந்தொகையினர். மொத்த வாக்காளர்களில் 42 விழுக்காட்டினர் யாருக்கும் வாக்களிக்கவில்லை. வாக்களிக்காதவர்கள் அனைவரும் அரசியல் அக்கறை அற்றவர்கள் என்றோ, தங்கள் சனநாயகக் கடமையைச் செய்யத் தவறியவர்கள் என்றோ சொல்லி அலட்சியப்படுத்துவது சரியாகாது. எத்தனையோ கவர்ச்சிகரமான பரப்புரை முயற்சிகளை எல்லாம் மீறி அவர்கள் வாக்களிக்க மறுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் எந்தக் கட்சியையும் எந்தக் கூட்டணியையும் எந்தத் தலைவர் அல்லது தலைவியையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது.

வாக்குரிமை போலவே வாக்களிக்க மறுப்பதும் சனநாயக உரிமைதான்.

சட்டமியற்றத் துப்பில்லாத சட்டப் பேரவைக்கும் நகராட்சிப் பணிகளுக்கு மேல் வேறெந்த 'சாதனை'யும் செய்யத் துப்பில்லாத மாநில அரசுக்கும் நடைபெற்ற தேர்தலில் இவ்வளவு பேர் வாக்களிக்க மறுத்தது நியாயமே.

கழுதைக்குத் திருமணம் செய்து வைத்தால் மழை பெய்யும் என்று எவ்வளவு காலம்தான் நம்பிக்கொண்டிருப்பது?



படிப்பகம்

www.padippakam.com

# திருச்சிராப்பள்ளி தந்த திருப்பம்

தமிழ் தமிழர் இயக்கத்தின் சிறப்புப் பொதுப் பேரவை சென்ற ஏப்ரல் முதல் நாள் திருச்சிராப் பள்ளியில் நடைபெற்றது. 'தன்னுரிமை' தொடர்பாக இயக்கத் திற்குள் நடைபெற்று வந்த விவாதத் திற்கு முடிவு காண்பது ஒன்றே இப்பேரவையின் நோக்கம். தோழர் கள் குறிஞ்சிக் கபிலன், தேவேந்திரன், சேகர் ஆகிய மூவர் கொண்ட தலைமைக் குழு பேரவையை வழிநடத்தியது.

இயக்கத்தின் அடிப்படை ஆவணத்தில் தான் ஏற்கெனவே முன்மொழிந்துள்ள திருத்தங்களை வலியுறுத்தி தோழர் தியாகு பேசினார். தோழர் சுபவீ உட்பட பல தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றார் கள். நடுப்பகல் வரை விவாதம் நீடித்தது. முடிவில் கருத்து உடன் பாடு ஏற்படாததால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தன்னுரிமையா? தேசிய விடுதலையா? என்ற வினாவை முன்வைத்து நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மை அடிப்படையில் தேசிய விடுதலை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதை அடுத்து தோழர் சுபவீ இயக்கத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். தலைமைப் பொறுப்பில் இருந்து தோழர் சுபவீ ஆற்றிய பணியைப் பாராட்டியும் அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தும் பேரவை ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றி யது. தேசிய விடுதலை வழியாகத் தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசு அமைப்பது என்னும் குறிக்கோளை அடைவதற்குப் புதிய புரிதலின் அடிப்படையில் இயக்கத்தைச் சீரமைத்து வழிநடத்த பொதுச் செயலாளர் தோழர் தியாகு உள்ளிட்ட அறுவர் கொண்ட புதிய தலைமைக் குழுவைத் தேர்ந்தெடுத்து பேரவை நிறைவு பெற்றது.

## தோழர் சுபவீ கடிதம்

(தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகுவிற்கு தோழர் சுபவீயிடமிருந்து சென்ற மே 3ஆம் நாள் வந்து சேர்ந்த கடிதத்தை இங்கு வெளியிடுகிறோம்.)

அன்புள்ள தோழருக்கு,

வணக்கம். 01-04-01 அன்று திருச்சியில் நடைபெற்ற நம் பொதுப் பேரவை முடிவில் ஏற்பட்ட இயக்கத்தின் கருத்தியல் மாற்றத்தினால் தொடர்ந்து உங்களுடன் இணைந்து பணியாற்ற இயலாத நிலையில் உள்ளேன். எனவே தமிழ் தமிழர் இயக்கத்தின் அடிப்படை உறுப்பினர் நிலையிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்பதனை மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்.

நம் இருவருக்குள் எப்போதும் தன்முனைப்புப் போட்டி ஏற்பட்டதில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். இப்போதும் அப்படியே. என் அரசியல் ஆசான்களில் ஒருவராகவே உங்களை நான் எப்போதும் கருதுகின்றேன். நாம் இணைந்து பணியாற்றிய நாட்களில், அரசியல், வரலாற்றுச் செய்திகள் பலவற்றை உங்களிடமிருந்து நான் நிறையக் கற்றேன்; இனியும் கற்பேன்.

கருத்தியல் அடிப்படையில் நமக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விட்டமையால் நாம் இணைந்து பணியாற்ற இயலவில்லையே தவிர, உங்கள் மீது எனக்கு எவ்விதப் பகை உணர்வும் இல்லை. இயக்கத்தை விட்டுப் பிரியும் மற்ற நண்பர்கள் நிலையும் அதுவே. உங்கள் மீதும், நம் இயக்கத் தோழர்கள் மீதும் என்றும் மாறாத அன்பு எனக்கும், நண்பர்களுக்கும் உண்டு; நம் நட்பும் தோழமையும் தொடர வேண்டும் என்பதே என் விருப்பம்.

அனைவருக்கும் என் நன்றி.

கனத்த நெஞ்சோடு விடைபெறுகின்றேன்.

தோழமையுடன்,
சுப. வீரபாண்டியன்



படிப்பகம்

www.padippakam.com

# 14 டான் பிரீனின் அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம்

''சீன் கோகனை விடுவிப்பது அல்லது அந்த முயற்சியில் வீரச் சாவைத் தழுவிக் கொள்வது'' - ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொண்டோம். எங்களில் யாராவது ஒருவர் சீன் கோகனின் இடத்தில் இருந்து, சீன் கோகன் எங்களிடத்தில் இருந்திருந்தாலும், அவன் இதே முடிவைத்தான் எடுத்திருப்பான். அதில் ஐயமில்லை.

சீன் கோகன் எப்படி எதிரிகளிடம் அகப்பட்டுக் கொண்டான் என்ற விவரம் எங்களுக்கு விரைவிலேயே கிடைத்தது. நடன நிகழ்ச்சியிலிருந்து நாங்கள் கிளம்பியதும், அவனும் எங்களைத் தொடர்ந்து வெளியேறியுள்ளான். அரங்கிலிருந்து சிறிது தொலைவுதான் நடந்திருப்பான்; சற்றும் எதிர்பாராத வகையில் திடுமெனப் பத்துக் காவல் தடியன்களால் சூழப்பட்டுத் தளைப்படுத்தப்பட்டுள்ளான்; எங்களைப் போலவே அவனும் துமுக்கியைக் கொண்டு சென்றிருந்தும், அதைப் பயன்படுத்த எந்த வழியும் இல்லாமல் போயிருக்கிறது.

கோகன் தளைப்படுத்தப்பட்ட அந்த நாட்களில் அயர் லாந்தில் ''மோதல் நாடகங்கள்'' எதுவும் அரங்கேறி யிருக்கவில்லை. பின்னாளில் ஆங்கிலப் படையினர் வகைவகையான மோதல் நாடகங்களை அரங்கேற்றினர் : ''காவலிலிருந்து தப்பிக்க முயன்ற பயங்கரவாதி சுடப்பட்டு சாவு'', ''படையினருடன் நடந்த மோதலில் தீவிரவாதி கொல்லப்பட்டான்!'' - இப்படி எத்தனை எத்தனையோ நாடகங்கள்! தளைப்படுத்தப்பட்ட அப்பாவிகள் பலர் காணாமல் போயுள்ளனர். புரட்சிக்காரர்களை ஒழித்துக் கட்டும் இந்தப் புதிய உத்தி அப்பொழுதே நடைமுறைக்கு வந்திருந்தால், கோகனும் உயிரோடு இருந்திருக்க மாட்டான்; எங்களுக்கும் வேலை இல்லாமல் போயிருக்கும்.

எங்களுடைய முதற்பணி கோகன் எங்குச் சிறை வைக்கப்பட்டுள்ளான் என்பதைக் கண்டறிவதாக இருந்தது. ஆனால் அது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. கோகனைச் சுமந்து சென்ற படைத்துறை வண்டியைப் பார்த்த எவரும் எங்களுக்கு அகப்படவில்லை. நெருக்கடி நிலை நடைமுறையில் இருந்ததால் பெரும்பாலும் இரவு நேரங்களில் பொது மக்கள் சாலையில் நடமாடுவதில்லை. அவ்வாறு செய்வது காவலர்களின் வீண் உசாவலுக்கு வழி வகுக்கும். படையினரும் காவலரும் இரவு பகலாகச் சாலைகளைக் கண்காணித்த வண்ணம் இருந்தனர்.

சுற்றியுள்ள தர்லெஸ், திப்பரேரி, கேசெல் போன்ற பல படை முகாம்களில் ஏதாவது ஒன்றில்தான் கோகன் சிறை வைக்கப்பட்டிருக்க வேண்டும். படை முகாம்கள் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் மிதிவண்டியில் ஆள்களை அனுப்பினோம். நேரம் கடந்து செல்லச் செல்ல எங்களுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. ஒவ்வொரு மணித் துளியும் எங்களுக்கு முகாமையாகப் பட்டது. காலம் கடத்துவது எதிரிக்கு வாய்ப்பைத் தந்து விடும். எதிரி கோகனை நாங்கள் அடைய முடியாத இடத்திற்குக் கொண்டு சென்று விடக் கூடும். எதிரிக்கு இந்நேரம் தெரிந்திருக்கும், தனது கையில் கிடைத்திருப்பது சிறிய இரையல்ல, பெரிய மீன் என்பது.

நாங்கள் நிம்மதியிழந்து தவித்துக் கொண்டிருந்தோம். கடைசியாக, ஒரு வழியாகச் செய்தி வந்து சேர்ந்தது - தர்லெஸ் காவலர் முகாமில் கோகன் வைக்கப்பட்டுள்ளான் என்று.

**கலை வேலு**

கிடைத்த செய்தி ஒன்றும் எங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. தர்லெஸ் காவலர் முகாமிலிருந்து அவனை மீட்பது என்பது முற்றிலும் முடியாத செயல். அது எமனின் கோட்டைக் கதவைத் தட்டுவதைப் போலத்தான்.

தர்லெஸ் ஓரளவிற்குப் பெரிய நகரம். காவலர் முகாம், படை முகாம் ஆகிய இரண்டும் அங்கு அமைந்துள்ளன.

இரண்டும் வலுவான காவலரண்களைப் பெற்றவை; எந்நேரமும் விழிப்புடன் காவல் காக்கப்படுபவை. டப்ளினி லிருந்து கார்க் செல்லும் முதன்மைச் சாலையில் அவை அமைந்திருந்தன.

சீன் கோகனின் இருப்பால் தர்லெஸ் காவலர் முகாம் மேலும் வலுப்படுத்தப்பட்டிருக்கக் கூடும். சோலோ கெட்பெக் தாக்குதலில் பங்கேற்ற நால்வரில் அவனும் ஒருவன் என்பதை அவர்கள் நன்கு அறிவர். அவனை மீட்க நாங்கள் முயலக் கூடும் என்பதைக் கூட அவர்கள் ஊகித்திருக்கலாம். இந்நிலையில் தர்லெஸ் முகாமுக்குள் ஊடுருவது, காவலரணை உடைத்து உள் நுழைவது என்பனவெல்லாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை.

## திட்டம் துலங்கியது

எனினும், நாங்கள் மனம் தளர்ந்து விடவில்லை. எங்களுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. தர்லெஸ் முகாமில் கோகனை நீண்ட நாள்கள் வைத்திருக்க மாட்டார்கள். பொதுவாக இத்தகைய உள்ளூர் முகாம்களில் கைதிகளை ஓரிரு நாள்கள்தாம் வைத்திருப்பர். தொடக்கநிலை உசாவல்கள் மட்டுமே அங்கு நடைபெறும். அதன் பிறகு அவர்களைப் பெரிய சிறைச்சாலைகளுக்கு மாற்றி விடுவர்.

மவுண்ட்-சாய், கார்க், மேரிபரவ், தண்டால்க், பெல்பாஸ்ட் ஆகிய அயர்லாந்தின் மிகப் பெரிய சிறைச் சாலைகளாகும். இவற்றில் ஏதேனும் ஒன்றிற்குக் கோகன் மாற்றப்படலாம். வழக்கமாகத் திப்பரேரியைச் சேர்ந்தவர் களைக் கார்க் சிறைச் சாலைக்குத்தான் கொண்டுசெல்வார் கள். கோகனும் இன்னும் இரண்டொருநாள்களில் அங்குக் கொண்டுசெல்லப்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம்.

கார்க் சிறைச்சாலைக்கே கோகன் கொண்டுசெல்லப்படு வான் என்ற எங்களின் நம்பிக்கையின் அடிப்படையில் திட்டங்கள் அணியமாயின. எமிலி தொடர்வண்டி நிலையத்தில் கோகனைச் சுமந்து வரும் வண்டியை மறித்து அவனை மீட்பது என்பதே எங்கள் திட்டம்.

எமிலியை நாங்கள் தேர்ந்தெடுத்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. அது மிகவும் சிறிய தொடர்வண்டி நிலையம். அங்குப் படை வீரர்கள் எண்ணிக்கையும் குறைவு.



படிப்பகம்

www.padippakam.com

காவலர்களைப் பற்றி நாங்கள் எப்பொழுதுமே கவலைப் பட்டதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக நாங்கள் நன்கு அறிந்திருந்த மாவட்டத்தில் அது அமைந்திருந்தது. அம்மாவட்டத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் நாங்கள் அறிவோம். அம்மாவட்டத்தின் ஒவ்வொரு திசையிலும் எங்களுக்கு நண்பர்கள் இருந்தனர்.

மூன்று மாவட்டங்களின் எல்லையைத் தொடுவதாகவும் எமிலி அமைந்திருந்தது இன்னொரு சிறப்பு. இதனால் எங்களுக்குத் தப்பிச் செல்வது மிகவும் எளிது. நாங்கள் எங்குச் சென்றுள்ளோம் என்பதை எதிரியால் உறுதியாக முடிவு செய்ய முடியாது. வட கார்க்கிற்குள் நுழைந்து விட்டார்களா, தென் திப்பரேரிக்குச் சென்று விட்டார்களா, கிழக்கு லிமெரிக்கிற்குள் பின்வாங்கி விட்டார்களா, அல்லது மலைகளுக்குள் பதுங்கிக் கொண்டார்கள்ா என அவன் முடிவு செய்வது கடினம். எங்களுக்கேற்ற இத்தகைய நிலவியல் சூழல்களுடன், எமிலியை அடுத்திருந்த கால்பல்லி சிற்றூர் இளைஞர்கள் மீது எங்களுக்கு அளவற்ற நம்பிக்கையும் இருந்தது.

ஆனாலும், தொடர்வண்டியைத் தடுத்து நிறுத்தி, பாதுகாப்புடன் கொண்டுசெல்லப்படும் கோகனை விடுவித்து, நாங்களும் தப்பிப்பது என்பது அவ்வளவு எளிதான செயலன்று; அதுவும் எங்கள் மூவரால் மட்டுமே ஆகக் கூடிய காரியமன்று. எங்களுக்குப் பல வகைகளிலும் உதவிகள் தேவைப்பட்டன; எங்களது தாக்குதல் திறன் வலுப்படுத்தப்பட வேண்டும். அடுத்தடுத்து தொடர்ந்து களமிறங்கக் கூடிய ஆள் வலு இதற்கு மிகவும் அடிப்படையானது.

முதலில் எங்களுக்குத் தேவைப்பட்டது செய்தித் தொடர்புக்கான ஆள்கள். தொலைபேசியையோ, தொலைவரியையோ பயன்படுத்துவது கூடவே கூடாது. அவற்றைப் பயன்படுத்துவதும் நேரடியாக ஆங்கிலப் படையினருக்கு எங்கள் திட்டங்களைத் தெரிவித்து விடுவதும் ஆகிய இரண்டும் ஒன்றுதான். எனவே எங்களுக்கான செய்தி ஆள்களை உடனடியாகப் பெற்றுக் கொண்டோம்.

நாங்கள் செய்த அடுத்த வேலை திப்பரேரி தொண்டர் படைப் பிரிவு பொறுப்பாளருக்கு எங்கள் திட்டங்களை விளக்கமாகத் தெரியப்படுத்தியதுதான். எங்களுக்குத் தேவைப்படும் நிலையில் உடனடியாக வீரர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்ற ஆணையையும் பிறப்பித்தோம். திப்பரேரிக்கும் எமிலிக்கும் இடையிலான தொலைவு ஏழு கற்கள்தாம். திப்பரேரியிலிருந்து மிதிவண்டியில் எமிலியை அடைய ஒரு மணி நேரம் கூடப் பிடிக்காது.

எங்கள் திட்டங்களை விரைந்து இறுதிப்படுத்தினோம். எல்லா ஆயத்தங்களையும் செய்து கொண்டோம். எங்களுடைய எல்லா வேலைகளிலும் நெட் ரெய்லியும், ஓ கீப் சகோதரர்களும் உடனிருந்து அனைத்து உதவிகளையும் செய்தார்கள்.

செய்ய வேண்டிய எல்லா முன்னேற்பாடுகளையும் முழுமை செய்து விட்டு, 1919 மே 12 காலை 10 மணிக்கு தர்லெஸ் நோக்கிப் புறப்பட்டோம். எங்களது நெஞ்சங்கள் சோகத்தில் கனத்திருந்தன. எனினும் நாங்கள் சிறிதளவும் நம்பிக்கை இழந்து விடவில்லை. கவலை ஒரு பக்கம்; ஆத்திரம் ஒரு பக்கம்; பரபரப்பு மறு பக்கம். இவற்றால் எங்கள் அரத்தம் கொதிப்பேறிப் போயிருந்தது.

எங்கள் மிதிவண்டிகள் எமிலியை நோக்கிப் பயணம் செய்தன. நடன நிகழ்ச்சிக்குப் பிறகு தூங்கிய அந்த ஒரு மணி நேரத் தூக்கந் தவிர கடந்த அய்ந்து நாள்களில் எங்களுக்கு நல்ல உறக்கமோ ஓய்வோ இருக்கவில்லை.

மற்ற சமயங்களிலென்றால் எமிலிக்கு நேர்வழியில் சென்றிருப்போம். நேர்வழியில் எமிலி முப்பது கல் தொலைவுதான். நேர் பாதையைத் தவிர்த்து விட்டோம். திப்பரேரிப் பக்கமாகக் கூடச் செல்ல இயலவில்லை. கரடு முரடான மேடு பள்ளங்கள் நிறைந்த பாதைகளிலேயே சென்றோம். நாங்கள் இது வரை மேற்கொண்ட பயணங்களிலேயே இதைத்தான் மிகவும் கடினமான பயணம் என்று சொல்ல வேண்டும். நானும் சீன் திரேசியும் டப்ளினுக்கு மேற்கொண்ட பயணம் கூட இவ்வளவு களைப்பை உண்டாக்கவில்லை.

நாங்கள் டோனோகில்லை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது இராபின்சனுடைய மிதிவண்டி பழுதடைந்து விட்டது. எங்களுக்கு அதைப் பழுது பார்க்க நேரமோ வேண்டிய கருவிகளோ இல்லை. ஆனால் உதவ நண்பர்கள் இருந்தனர். டோனோகில்லைச் சேர்ந்த பேட்ரிக் ஓ' டயர் **(Patrick O' Dwyer)** புதிய மாற்று வண்டியை உடனே ஏற்பாடு செய்து தந்தார். இவரது துணைவியார் கோகனுக்கு ஒன்றுவிட்ட சகோதரி ஆவார்.

மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது. எங்கள் உடல்களைப் பொறுத்த வரை அவை முற்றாகக் களைத்துப் போயிருந்தன. வேறு நேரமென்றால், இந்நேரம் சாலையோரம் படுத்துத் தூங்கிப் போயிருப்போம். நண்பனிடம் நாங்கள் கொண்டிருந்த அன்பு, அவனை மீட்க வேண்டும் என்ற வெறி ஆகிய இவையே களைத்துப் போன எங்கள் உடல்களுக்கு வலுவூட்டி இயக்கிக் கொண்டிருந்தன. ஊலா என்ற ஓரிடத்தில் உண்மையிலேயே மிதி வண்டியில் தூங்கிப் போய் கீழே விழவிருந்தோம். எனினும், ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக் கொண்டு வெறித்தனமாகப் பயணத்தைத் தொடர்ந்தோம். மலை, பள்ளத்தாக்குகள் என எங்கள் மிதிவண்டிகள் ஏறி இறங்கி விரைந்து கொண்டிருந்தன. கோகனின் விடுதலை அல்லது வீரச் சாவு என்பதைத் தவிர எங்கள் மனத்தில் வேறு எதுவும் இடம் பெற்றிருக்கவில்லை.

வலப்புறமாகச் சுற்றி, நெருக்கடி நிலைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பகுதியைக் கடந்து லிமெரிக் மாவட்டத்திற்குள் நுழைந்தோம். ஒவ்வோர் இடத்தையும் கடக்கும் பொழுது அவற்றின் வரலாற்றுப் பெருமைகளை சீன் திரேசி எங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டே வந்தார். அவருக்கு அயர்லாந்து வரலாற்றின் மீது அளவற்ற காதல். கல்லன் என்ற சிற்றூரின் வரலாற்றுச் சிறப்புகளை எங்களுக்கு விளக்கினார். பல்லிநீட்டி **(Ballyneety)**, அதனையடுத்திருந்த பாழடைந்த அரண்மனைகள் ஆகியவற்றின் சிறப்புகளைச் சொன்னார். நாங்கள் பயணம் செய்த அதே சாலையில்தான் முன்னூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பேட்ரிக் சார்ஸ்பீல்டு **(Patrick Sarsfield)** தன் படை வீரர்களை நிலவு ஒளிர்ந்த இரவில் நடத்திச் சென்றார். அவரது வாள் வீச்சு அன்று எதிரிகளைக் கலங்கடித்தது.

முன்னூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அதே வீர வரலாறு மீண்டும் அரங்கேறவிருப்பதை சீன் திரேசி எடுத்து விளக்கிய போது நாங்கள் மெய்சிலிர்த்துப் போனோம். அன்று கேல்லப்பிங் கோகன் **(Galloping Hogan)** என்ற திப்பரேரி போராளியை மீட்கத்தான் அவர் படை



படிப்பகம்

www.padippakam.com

நடத்தினார். இன்றும் திப்பரேரியைச் சேர்ந்த அதே மரபில் வந்த அதே பெயர் கொண்ட சீன் கோகனை மீட்க நாங்கள் விரைந்து கொண்டிருக்கிறோம். அன்று அவர்கள் நாடு கடத்தப்பட்டவர்கள்; அதே போல் இன்றும் நாங்கள் நாடு கடத்தப்பட்டவர்கள்.

சீன் திரேசி தொடர்ந்து இவ்வாறான வரலாற்று நிகழ்வுகளைக் கூறி எங்களை ஊக்கப்படுத்திக் கொண்டே வந்தார். நாங்களும் பயணக் களைப்புத் தெரியாமல் உற்சாகத்தோடு கேட்டுக் கொண்டே வந்தோம். ஆனால் எங்களுடைய இந்த வரலாற்று வகுப்பிற்கு இரு முறை அதிர்ச்சி இடையூறுகள் நேர்ந்தன. ஒரு முறை சீன் திரேசி உணர்வு பொங்க நிகழ்வுகளைக் கூறிக் கொண்டு வரும் பொழுது, 'தொப்'பென்ற ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தோம். இராபின்சன் கீழே விழுந்து கிடந்தான். மிதிவண்டி அவன் மேல் கிடந்தது. பக்கத்தில் சென்று பார்த்தால் அப்படியே தூங்கிப் போயிருந்தான். குறித்த நேரத்தில் எமிலியைச் சென்றடைவது திட்டத்தின் வெற்றிக்கு முகாமையென்பதால், இராபின்சன் மீது எங்களால் இரக்கம் காட்ட முடியவில்லை. அவனைத் தட்டி எழுப்பிப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

இன்னொரு முறை திடீரென்று குண்டு வெடிக்கும் ஓசை. புகை மண்டலத்தால் சூழப்பட்டோம். எதிரியின் தாக்குதல்தான் என்று ஒரு நொடி அதிர்ந்து போனோம். நாங்களும் தாக்குதலுக்கு முகங்கொடுக்க அணியமானோம். ஆனால் அப்புறம்தான் தெரிந்தது, அது எதிரியின் குண்டல்ல, இராபின்சன் பையிலிருந்து கீழே விழுந்து வெடித்த குண்டு என்று. நல்ல வேளை யாருக்கும் ஒன்றும் நேரவில்லை.

மே 13, காலை 3.30 மணி - எமிலியை அடைந்து விட்டோம். இடையில் ஓரிரு இடங்களில் நண்பர்களைச் சந்தித்து, திட்டத்தை மேலும் செழுமைப்படுத்திக் கொண்டோம்; வேவு ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்தி முறைப்படுத்திக் கொண்டோம்.

இவ்விடத்தில் லேக்கெல்லியில் (Lackelley) மலோனி (Maloney) குடும்பத்தினர் செய்த உதவியைக் குறிப்பிட்டாக வேண்டும். அவர்களது வீட்டில் எங்களுக்கு அன்பான வரவேற்பு கிடைத்தது. எங்களது திட்டங்களைப் பற்றித் தோழர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்த பொழுது, சுவையான உணவும் கிடைத்தது. அனைத்திற்கும் மேலாய் வீட்டுத் தலைவி மே மலோனி தாம் எந்த உதவியும் செய்ய அணியமாக இருப்பதாக அறிவித்தது எங்களுக்கு வெற்றிக் கனியையே பறித்து விட்டதைப் போன்ற மகிழ்ச்சியை அளித்தது.

மே மலோனி நாங்கள் அவருக்கு அளித்த பணியை உடனடியாக மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். தர்லெஸ்ஸிலிருந்து செய்தி அனுப்பும் பணி அவருக்கு அளிக்கப்பட்டது. மலோனி பொறுப்பை ஏற்றுக் கொண்டு தர்லெஸ் சென்றடைந்தவுடன் அனுப்பிய முதல் செய்தி, சீன் கோகன் இன்னும் அங்குதான் உள்ளான் என்பதே. எங்கள் திட்டத்தின் உயிர்நாடியாக அவர் அமைந்து விட்டார். பின்னாளில் இதனால்தானோ என்னவோ மலோனியின் வீடு ஆங்கிலப் படையினரால் முற்றாக அழிக்கப்பட்டது. மே மலோனியும் அவரது உடன் பிறந்தவர் தானும் (Danu) அண்மைக்காலப் போரின் போது சிறையில் அடைக்கப் பட்டனர்.

மே 13, காலை மணி 10. சீன் கோகனின் மீட்புக்கான அனைத்து ஏற்பாடுகளையும் முழுமை செய்து விட்டோம். தர்லெஸ்ஸிலிருந்து வரும் முதல் வண்டி நண்பகல்வாக்கில் தான் எமிலி வந்து சேரும் என்பதையும் அறிந்து கொண்டோம். எல்லாம் அணியமாக இருந்த நிலையில், திப்பரேரியிலிருந்து உறுதியளிக்கப்பட்ட தொண்டர் படை வீரர்கள் இன்னும் வந்து சேராமலிருந்தார்கள்.

நேரம் நண்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. திப்பரேரி வீரர்கள் வருவதற்கான அறிகுறியே தென்படவில்லை. எங்கள் கண்கள் திப்பரேரிச் சாலையையே அளந்த வண்ணம் இருந்தன. நேரம் நெருங்க நெருங்க படபடப்பு மிகுந்தது. சாலையில் எந்த மிதிவண்டியும் கண்ணில் படவில்லை. என்ன நேர்ந்தது? நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோமா? எங்களால் நம்ப முடியவில்லை. மணி பதினொன்று! யாரும் வந்ததாகக் காணோம். கடிகார முள் இப்பொழுது வெகு விரைவாக ஓடியதாகத் தோன்றியது. மணி 11.30. வீரர்கள் வருவதற்கான அறிகுறியே இல்லை. மணி 12 என்கிற பொழுது வண்டி நிலையத்திற்குள் நுழைந்து விடும்.

இப்பொழுது எங்களுக்குள் ஓர் உறுதி பிறந்தது. எதிர்ப்பின்றி சீன் கோகனை எதிரி கொண்டு செல்ல நாங்கள் விட்டுவிடப் போவதில்லை. காவலுக்கு ஏறத்தாழ நான்கிலிருந்து எட்டுக் காவலர்கள் வரக் கூடும். அவர்கள் நிறைஆயுதபாணிகளாய் இருப்பார்கள் என்பதிலும் அய்யமில்லை.

தொடர்வண்டியில் மேலும் கூடுதலாகக் காவலர்களும் படை வீரர்களும் வரக் கூடும். எங்களது எண்ணிக்கை வெறும் மூன்றுதான். எங்களது முயற்சி தோல்வியில்தான் முடியும். நாங்கள் வீழ்ந்து படுவோம். ஆனால் எதிரிகள் எத்தனை பேரை வீழ்த்த முடியுமோ அத்தனை பேரை வீழ்த்தி விட்டு வீழ்வோம்.

சரியாக மணி 12. நாங்கள் மூவரும் தொடர்வண்டி நிலையத்திற்குள் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தோம். வண்டி இரைச்சலுடன் நிலையத்திற்குள் மெதுவாக நுழைந்து கொண்டிருந்தது.

*(மீண்டும் சந்திப்போம்)*


# தணிகைச் செல்வன் கவிதைகள்

**1970 முதல் 2000 வரை வந்த கவிதைத் தொகுப்புகள் ஒரே நூலாக மே மாத வெளியீடு**

600 பக்கங்கள் ✱ விலை. ரூ. 250
முன் பதிவுச் சலுகை விலை ரூ. 150

*தொகை அனுப்பவும் தொடர்புக்கும் :*
**தணிகைச் செல்வன்**
15, ஸ்ரீராம் காலனி, தாம்பரம் சானடோரியம்,
சென்னை - 600 047.
தொலைபேசி - 2232810




படிப்பகம்

www.padippakam.com



# புலிப் பால்

மரு. ஐ. சிவசுப்ரமணிய ஜெயசேகர்,
எம்.டி. - பொது மருத்துவம் - தமிழ்வழி

"அவ்வளவு தானாங்க! நோயாளிங்கல்லாம் முடிஞ்சு போச்சா?" என்றேன் என் உதவியாளர் ராணியிடம். மணி இரவு ஒன்பதரையிருக்கும். என் மருத்துவ ஆலோசனை அறையை மூடும் நேரம்தான். ஏனோ ராணியிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. சற்று நேரத்திற்குப் பிறகு அலுப்புடன் "இருங்க சார். ஒரே ஒரு பேஷண்ட் ஆட்டோவுல வந்து இறங்குறாங்க" என்றார். வீட்டிற்குப் போய் குழந்தைக்கும் அவனுக்கும் உணவு பரிமாற வேண்டுமே என்ற கவலை குரலில் தெரிந்தது. எனக்கு இது போன்ற கவலைகள் எல்லாம் நான் மருத்துவனாக வேலை பார்க்க ஆரம்பித்த நாள் முதல் மறைந்து போயிற்று. இந்த நேரத்திற்குப், பணி முடிந்து, இந்த நேரத்திற்கு கிளம்ப வேண்டும் என்பதை இது நாள் வரை என் நோயாளிகள்தான் தீர்மானிப்பார்கள். இதனால் பல நாள் மனைவியிடம் வாங்கிக் கட்டிக் கொள்வதுண்டு. எனினும் என் மருத்துவப் பணி மகிழ்ச்சியும் கவலையும் கலந்து கழிந்து வந்தது. என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்குவதும், என்னைக் கவலைக்குள்ளாக்குவதும் என் நோயாளிகளே.

என் சிந்தனை நீள்வதற்குள் நோயாளி கதவைத் தட்டினார். அதனைத் தொடர்ந்து "டாக்டர் நான் உள்ளே வரவா?" என்று ஒரு பெண் குரல் ஒலித்தது.

உள்ளே வரலாம் என நான் சம்மதம் தெரிவித்ததும் தானியங்கிக் கதவைத் தள்ளிக் கொண்டு துப்பட்டி சகிதம் ஒல்லியான உடல்வாகுள்ள ஒரு முஸ்லீம் பெண்மணி உள்ளே நுழைந்தார்.

தொடர்ந்து 3ஆவது நாளாக இப்பெண் என்னிடம் மருத்துவ ஆலோசனைக்கு வந்துள்ளார். அதுதான் என்னை ஆச்சரியப்பட வைத்தது. பொதுவாக மோசமான நோய் அல்லது மோசமான உடல் நிலை உள்ளவர்களை மட்டுமே தொடர்ந்து வரச் சொல்வது எனது வழக்கம். மற்றவர்களுக்கெல்லாம் அறிவுரைகளுடன் மாத்திரை எழுதிக் கொடுத்து அனுப்பி விடுவேன். எனவே தொடர்ந்து 3ஆவது நாளாக என்னைத் தேடி வரும் காரணம் அறிய அந்தப் பெண்ணை நோக்கி, "என்னங்க இன்னமும் சரியாகவில்லையா?" என்றேன். (ஏதோ வயிற்று வலி என என்னிடம் அப்பெண் வந்து போனதாக ஞாபகம்.)

ஐந்து மாத கர்ப்பிணியான அப்பெண் நேற்றும் முன்தினமும் அவரது உறவினரின் துணையுடன்தான் வந்திருந்தாள். வந்தது அவரது மாமியாராக இருக்க வேண்டும். இன்று யாருடைய துணையுமின்றி தனியாக வந்தது. எனக்கு சற்று ஆச்சர்யத்தை அளித்தது. பெண்களை, குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களைப் பரிசோதிப்பது மிகவும் சங்கடமான காரியமாகும் என்ற போதிலும் எப்போதேனும் யாரையாவது அருகில் வைத்துக் கொள்வது என் வழக்கம். எனவே எனக்கே உரிய கவலையுடன் அவரை நோக்கினேன். என்னுடைய எண்ணங்களை உணர்ந்தது போல அப்பெண் "டொக்டர் நான் உங்கள்கிட்ட கொஞ்சம் தனியா, பேசணும்" என்றார். அவரது தமிழ் உச்சரிப்பு எனக்கு சற்று வேடிக்கையாக இருந்தது.

அவர் மீண்டும் "டொக்டர், நான் நேத்து என் மாமியோட



படிப்பகம்

www.padippakam.com

வந்தப்ப உங்கட்ட ஒரு விஷயத்தை மறைச்சிட்டேன்'' என்றார் லேசான பதட்டத்துடன், நான் அவரை அமரச் சொல்லி சைகை காட்டினேன். பதட்டமில்லாமல் நிதானமாக பேசச் சொன்னேன். அதற்குள் அவரது கண்களில் கண்ணீர் தளும்பியிருந்தது. அடக்க முடியாத துக்கத்துடன் அவர்களைத் துடைத்துக் கொண்டார்.

''டொக்டர் என்ன என் மாமியாரும் நாத்தனாரும் கர்ப்பிணி என்றுகூட பார்க்காமல் அடிவயிற்றில் உதைச்சு, சூடு வேற போட்டுட்டாங்க'' என்று அவர் கூறியவுடன் நான் பதறிப் போனேன். ''இதென்ன கொடுமையா இருக்கு, இதயேன் நேத்தே எங்கிட்ட சொல்லல.''

''சொல்லக் கூடாதுன்னு என் மாமியார் மிரட்டுனாங்க, அதான் கூடவே காவலுக்கு வந்தாங்க. அதான் இன்னைக்கு அவுங்களுக்குத் தெரியாம உங்களைப் பார்க்க வந்தேன்'' என்றதுடன் தன் துப்பட்டியை விலக்கி, புடவையைச் சற்றுத் தளர்த்தி அடிவயிற்றைக் காட்டினார். சிவந்த புண்ணைப் பார்த்ததும் எனக்கு மனம் கசந்து போனது.

என்ன பெண்கள் இவர்கள்?

ஒரு கர்ப்பிணிப் பெண்ணிற்கு இன்னொரு பெண்ணே இது போன்ற கொடுமையைச் செய்யலாமா?

எப்படி மனம் வந்தது?

அப்படி என்ன தீர்க்க இயலா மாமியார் மருமகள் பிரச்சினை?

எனக்கு மருத்துவம் சற்று நேரம் மறந்து போனது. பரிதாபமான நிலையில் உள்ள அந்தப் பெண்ணைப் பெற்ற தாய் தந்தையை நினைத்துப் பார்த்தேன்.

''நீங்க எந்த ஊர்ம்மா?'' என்றேன் கவலையுடன். ''எனக்கு யாழ்ப்பாணத்துக்குப் பக்கத்துலே வெள்ளவத்தை''

யாழ்ப்பாணம், வெள்ளவத்தை எனும் பெயர்களைக் கேட்டதும் சட்டென்று மனத்தில் மகிழ்ச்சியின் ஊற்று திறந்து கொண்டது. ஈழத் தமிழரின் போரும் வாழ்வும் கண்முன் விரிந்தது.

''அங்கெருந்து இங்க எப்படி வந்தீங்க?'' என்றேன் ஆச்சர்யத்துடன்.

''நா இலங்கையிலிருந்து அரபுநாட்டுக்கு வேலைக்கு போயிருந்தேன். பலகாலம் அங்க இருந்தேன். என் கணவரும் நானும் ஒரே இடத்துல வேலை பார்த்தோம். அப்போ காதல் பண்ணித்தான் என்ன இவரு கல்யாணம் கழிச்சது. கல்யாணத்துக்கு அப்புறம் என்ன இவரு அவங்க அம்மா வீட்டுக்கு அழைச்சுகிட்டு வந்து விட்டுட்டுப் போயிட்டாரு''. லேசாக மூச்சு வாங்கிக் கொண்டார். தொடர்ந்து ''என்ன அவரு விட்டுட்டு போனதிலிருந்து இங்க ஒரே கொடுமைதான்; வரதட்சணை இல்லாம எந்த நாட்டுப் பொண்ணையோ மகன் இழுத்துக்குட்டு வந்துட்டான்னு என்னோட மாமியாரும் மத்தவங்களும் சேர்ந்து கொடுமைப்படுத்துறாங்க. போதாக் குறைக்கு நான் கர்ப்பமானது வேற அவங்களுக்குப் பிடிக்கல'' பேசி முடிக்கும் முன்னர் பல முறை கண்களைத் துடைத்துக் கொண்டார்.

தமிழ் ஈழத்தில் இலங்கை ராணுவத்தின் கொடுமைகளுக்கு நம் தமிழ்ப் பெண்கள் இலக்கானதைப் பார்த்து வேதனைப்பட்டோம். இன்று தமிழகத்திலேயே ஈழத்தமிழ்ப் பெண்ணுக்கு இப்படியொரு கொடுமையா? எனக்கு மனம் கொதித்தது.

அந்தப் பெண் அமைதியாக இருந்தாள். என் காதுகளில் பெரிதாய் வானொலியின் ஈழத் தமிழ்ப் பெண் புலிகளின் சாகசங்கள் ஒலித்தன. புலிப் படையில் ஈழத் தமிழ்ப் பெண்களின் சாதனைதான் எத்தனை மகத்தானது. தேடிப் பிடித்துப் படிக்கும் ஈழத்து செய்தி மடல்கள் கூட எனது மேசையின் மீது கிடந்தன. இயந்திரத் துப்பாக்கிகளுடன் பெண் புலிகள் இராணுவ உடையில் அணிவகுத்து நிற்பது தெரிந்தது. அந்த மண்ணிலிருந்து வந்த பெண்ணிற்கா இங்கு இப்படியொரு நிலை?

நான் ஒரு தெளிவிற்கு வந்தவனாய் அந்தப் பெண்ணுடன் விவாதிக்கத் தயாரானேன். ''ஏம்மா தமிழ் ஈழத்திலிருந்து வந்த பெண்ணா நீங்க? நீங்க இப்படி கோழையாக இருக்கலாமா? ஈழச் செய்தி வந்திருக்கும் இந்தப் பத்திரிகைகளைப் பாருங்க. உங்க சகோதரிகள்தாம் உயிருக்கு அஞ்சாமல் துப்பாக்கியினைத் தூக்கி படிச்சுகிட்டு இருக்காங்க.

ஓர் அரக்க குணம் படைச்ச அரசாங்கத்தையும், ராணுவத்தையும் எதிர்த்து உங்க சகோதரிகள் போராடுகிற போது உங்க மாமியாரையும், நாத்தனாரையும் எதிர்த்து உங்களால போராட முடியாது? பொடுசுகளைத் தாங்கி வளர்க்கிற வயித்தில இப்படி சூடு வாங்கிட்டு நிக்குறீங்களே, நல்லா யோசிச்சுப் பாருங்க.

போராடுறதுதான் வாழ்க்கை, போராட்டத்தை எங்க வேணும்னாலும் நடத்தலாம். எதிர்ப்புக் குணத்தைத் தவறான நடத்தை உள்ள யார் கிட்டையும் காட்டலாம். அது தமிழராய் இருந்தால் என்ன? தாயாதியாய் இருந்தால் என்ன?

என்னுடைய் வினோதமான நீண்ட உரையைக் கேட்டு உதவியாளர் ராணி ஒரு முறை கதவைத் திறந்து பார்த்து பின்னர் மூடிக் கொண்டார். நான் சொன்னவற்றைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த அப்பெண் பிறகு எனது மருத்துவ ஆலோசனைக்



படிப்பகம்

www.padippakam.com

குறிப்புடன் விடைபெற்றுச் சென்று விட்டார்.

கனத்த மனத்துடன் அன்றைய அலுவல்களை முடித்து விட்டு வீடு திரும்பினேன். நாட்கள் செல்லச் செல்ல வேலையின் தீவிரத்தில் அந்தப் பெண்ணை மறந்து போனேன். ஆறேழு மாதங்கள் ஆகியிருக்கும். ஒரு நாள் மாலை ராணி பரபரப்புடன் "சார்! அந்தப் பொண்ணு வராங்க சார்!" என்றார்.

"எந்தப் பொண்ணு?" என்றேன் நான். "நாலு மாசத்துக்கு முன்னாடி இங்க வந்துச்சில்ல சார், இலங்கைப் பொண்ணு, நம்ம ஊரு ஆள கட்டிகிட்டு..." நான் தலையைச் சொறிந்ததும்,

"என்ன சார், மறந்துட்டீங்களா? நீங்க கூட ரொம்ப நேரம் இலங்கை, விடுதலைப் புலின்னு பேசிகிட்டே இருந்தீங்க..." என்று இழுத்து நிறுத்தினாங்க.

அதற்குள் அந்தப் பெண் ஒரு குழந்தையை மார்போடு அணைத்தவாறு மலர்ந்த முகத்துடன் என் அறைக்குள் நுழைந்தாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்ததும் எனக்கு எல்லாம் உடனடியாக நினைவுக்கு வந்தது. விஷயத்தை அறியும் ஆவலாய் கதவினை மூடாமல் தலையை நீட்டி எட்டிப் பார்த்துக் கொண்டு நின்றார் ராணி.

"நல்லா இருக்கீங்களா? என்ன குழந்தை?" என்றேன், அவர் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டே "நான் இப்போ நல்லா இருக்கேன் சார்! ஆண் குழந்தைதான்; பிறந்து 40 நாள் ஆவுது" என்றாள். "பரவாயில்லையே, இப்போ ரொம்ப சந்தோசமாக இருக்கீங்களே, குடும்பத்தில் இருந்த பிரச்சனையெல்லாம் தீர்ந்துடுச்சா? எங்க உங்க மாமி?" என்றேன்.

"நான் இப்போ மாமியாரோட இல்ல சார். தனியாத்தான் இருக்கேன்; அன்னைக்கு ஒருநாள் உங்க கிட்ட வந்தேன்ல, அதுக்கப்புறம் நீங்க சொன்னத நினைச்சுப் பார்த்தேன். எங்க நாட்டில எப்படிப்பட்ட கஷ்டத்துக்கு நடுவுல எங்களோட பொண்ணுங்க வாழுறாங்கன்னு நான் மறந்திட்டேன்; நீங்கதான் எனக்கு அத ஞாபகப்படுத்தினீங்க; அதுக்குப் பிறகுதான் எனக்கு தைரியமே வந்துச்சு. நான் என் மாமியாரையும் நாத்தனாரையும் தைரியமாக எதிர்த்து நின்னேன். என் வீட்டுக்காரர்கிட்ட போன்ல பேசினேன். மூணு நாலு மாசம் தைரியமாக அவங்களை எதிர்த்து நின்ன பிறகு அவங்க சம்மதத்தோடேயே அதே தெருவில தனிக் குடித்தனம் போயிட்டேன். இப்போ அவங்க பணிஞ்சிட்டாங்க. எல்லாத்துக்கும் நீங்கதான் சார் காரணம். உங்களுக்கு நான் ரொம்ப நன்றி சொல்லணும். குடும்பத்தைப் பார்க்க ஈழத்துக்குப் போறேன்" என்றார் மகிழ்ச்சியுடன்.

எனக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. குழந்தை தாயின் மடியில் முண்டி நெளிந்தது. புலிப் பால் குடிக்க தாயிடம் பால் வேண்டி 'பொடியன்' அழ ஆரம்பித்தான்.

# தமிழ்த் தேசிய சமூக நீதி விளக்கக் கருத்தரங்குகள்

தமிழ் தமிழர் இயக்கத்தின் புதிய கருத்தியல் நிலைப்பாட்டை விளக்கும் வகையில் சென்ற ஏப்ரல் 23 மாலை இராசபாளையத்தில் தமிழ்த் தேசிய சமூக நீதி விளக்கக் கருத்தரங்கு நடைபெற்றது. இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் பொன். இளங்கோவன் தொடக்கவுரை நிகழ்த்த, தோழர் வ. மாரிமுத்து தலைமை வகித்தார். இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு விளக்கவுரை ஆற்றிய தோடு, வினாக்களுக்கும் விரிவாக விடையளித்தார். தோழர் குறிஞ்சிக்கபிலன் நன்றி நவின்றார்.

மறுநாள் ஏப்ரல் 24 மாலை மதுரையில் தமிழ்த் தேசிய சமூக நீதி விளக்கக் கருத்தரங்கு நடைபெற்றது. மாநகரச் செயலாளர் தோழர் தமிழ்மணி தலைமையில் தோழர் பரிதி, கதிர்நிலவன், தலைமைக் குழு உறுப் பினர் மு. கருப்பையா ஆகியோரை உரையாற்றியபின் தோழர் தியாகு விளக்கவுரையாற்றி, வினாக்களுக்கு விடையளித்தார்.

வருகிற மே 19ஆம் நாள் ஈரோட்டிலும், 20ஆம் நாள் கோவையிலும் தமிழ்த் தேசிய சமூக நீதி விளக்கக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

# தோழர் ஆர்.கே. சாமிநாதன் மறைந்தார்

தொழிற்சங்கச் செயல்வீரராய் இருந்து மாலெ. கட்சியின் தொடக்க காலத்தில் அதன் முன்னணித் தோழர்களில் ஒருவராக விளங்கியவர் தோழர் ஆர்.கே. சாமிநாதன். பிற்பாடு தலித்து இயக்கத்தின் பல்வேறு அரங்குகளிலும் தலைமைப் பங்கு வகித்தார். கடைசியில் லோக் ஜனசக்தியின் மாநிலச் செயலாளராகப் பொறுப்பு வகித்தார்.

தோழர் ஆர்.கே.எஸ். சென்ற மார்ச்சு 19 அதிகாலை ஒரு சாலை விபத்தில் உயிரிழந்தார். மார்ச்சு 20 நடுப்பகலில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் தோழர் கோவை ஈசுவரன் தலைமையில் தோழர் தியாகு, டி.எஸ்.எஸ். மணி, காளிமுத்து, பேரா. கோவிந்தசாமி, தங்கராஜ், துரைராஜ் மற்றும் ராணிப்பேட்டைத் தொழிலாளத் தோழர்கள் இரங்கல் தெரிவித்து, தோழர் ஆர்.கே.எஸ்.சுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். தோழர் ஆர்.கே. சாமிநாதனுக்கு தமிழ்த் தேசத்தின் வீரவணக்கம்!



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் தமிழர் இயக்கத்தின் 'தேர்தல் அறிக்கை'

# வாக்களிக்க மறுப்போம்! வாழ்வுரிமைக்காகப் போராடுவோம்!!

ஒரே நாளில் பல திரைப்படங்கள் வெளிவரும் போது திக்குமுக்காடிப் போகும் இரசிகர்களைப் போல் தமிழ் மக்களும் திணறிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் களத்தில் தினந்தோறும் அரங்கேறி வரும் நகைச்சுவைக் காட்சிகள் அவர்களைத் திணறடித்துக் கொண்டிருக்கின்றன.

பாரதிய சனதாக் கட்சியின் இந்துத்துவத்தோடும், ஏ.சி. சண்முகம், கண்ணப்பன், சேதுராமன் வகையறாக்களின் சாதி அரசியலோடும் கூட்டுச் சேர்ந்து 'பொற்கால ஆட்சி'யைத் தொடரத் துடிக்கும் கருணாநிதியின் தி.மு.க. ஒரு பக்கம்.....


கள்ளுண்ணாமையைப் பேசித் திரியும் மொடாக்குடியனைப் போல் ஊழலை ஒழிக்கப் போவதாகச் சத்தியம் செய்து திரியும் தண்டிக்கப்பட்ட ஊழல் குற்றவாளி செயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க. மறு பக்கம்....

பேரம் படியாத காரணத்தினாலேயே வீரம் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் வைகோவின் ம.தி.மு.க. மற்றொரு பக்கம்....

இவர்களும் இன்னும் பல உதிரிகளும் கிளப்பியுள்ள ஆரவாரப் புழுதியில் பல அடிப்படை உண்மைகள் மறைந்து கொண்டுள்ளன. அந்த உண்மைகளைத் தமிழ் மக்களுக்கு நினைவுபடுத்தும் கடமை எமக்குள்ளது.

1. ஒரு சட்டப் பேரவையையும் அதன் வழியாக ஒரு மாநில அரசையும் தேர்நதெடுக்கத்தான் தமிழ் மக்களாகிய நமக்கு உரிமை உண்டே தவிர இந்தப் பேரவையையும், இந்த அரசையும் எப்போது வேண்டுமானாலும் கலைக்கும் அதிகாரம் தில்லிக்குத்தான் உள்ளது.

2. சட்டப் பேரவை என்று சொல்லப்படுகின்ற 234 உறுப்பினர்களைக் கொண்ட இந்த மன்றத்திற்குச் சுயமாகச் சட்டமியற்றும் உரிமையே கிடையாது. இந்தப் பேரவை இயற்றும் தீர்மானங்களை ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ ஏற்று ஒப்பமிட்டால்தான் அவை சட்ட வடிவம் பெறும். எனவே நாம் தேர்ந்தெடுக்கப் போவது ஒரு மசோதா மன்றத்தைத்தானே தவிர சட்டப்பேரவையை அல்ல.




3. மாநில அரசு என்பது ஒரு விரிவடைந்த நகராட்சியே தவிர வேறல்ல. ஒரு காலத்தில், காந்தியாரின் சொற்களில், 'மாண்புமிகு நகராட்சி களாக' இருந்த மாநில அரசுகள் மென்மேலும் தேய்ந்து கரைந்து மாண்பிழந்து 'மானங்கெட்ட நகராட்சிகளாகி' விட்டன என்பதே உண்மை. மக்களை வாட்டி வதைக்கும் அடிப்படைச் சிக்கல்கள் எதற்கும் இந்த அரசுகளால் தீர்வு காண முடியாது என்பதே வரலாறு உணர்த்தும் படிப்பினை.

4. சட்டமியற்றத் துப்பில்லாத சட்டப் பேரவையை யும் உருப்படியான அதிகாரங்கள் ஏதுமில்லாத மாநில அரசையும் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் இந்தத் தேர்தல் அரசதிகாரம் பற்றிய மாயையை உருவாக்கு வதற்கும் உண்மையான போராட்ட அரசியலிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கும் மட்டுமே பயன்படுகின்றது.

நாம் சில கேள்விகளைக் கேட்டுப் பார்க்கலாம் :

* எந்த கட்சி அல்லது கூட்டணி வெற்றி பெற்றால், எந்தத் தலைவர் முதலமைச்சரானால் தமிழ் மக்களின் நெடுநாளையக் கனவுகள் நனவுகளாகும்?

* தமிழ்நாட்டில் தமிழே ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் அனைத்துத் துறைகளிலும் கோலோச்ச வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்ற யாரால் முடியும்?

* காவிரி தொடர்பாகக் கருநாடகத்திடமும், பெரியாறு தொடர்பாகக் கேரளத்திடமும் நாம் பறி கொடுத்து நிற்கும் ஆற்றுநீர் உரிமையை மீட்டுத் தர யாரால் முடியும்? தமிழகத்தின் ஆற்றுநீர் உரிமையை அடாவடியாக மறுக்கும் கருநாடகத்துக்கும் கேரளத்துக்கும் எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க யாரால் முடியும்?

* சிங்களக் கடற்படையின் கொலைகாரத் தாக்குதலால் வங்கக் கடலில் செந்நீர் கொட்டி செத்து மடியும் தமிழ் மீனவர்களின் உயிரைக் காக்க யாரால் முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

✱ தமிழக உழவர்களின் விளைபொருளுக்குக் கட்டுப்படியான விலை பெற்றுத் தரவும், நியாய விலையில் இடுபொருள் வாங்கித் தரவும் யாரால் முடியும்?

✱ தமிழகமெங்கும் மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை மீண்டும் திறக்கவும் மென்மேலும் மூடாமல் தடுக்கவும் தொழிலாளர் நலன் காக்கவும் யாரால் முடியும்?

✱ உலக மயமாக்கம், தனியார் மயமாக்கம், தாராள மயமாக்கம் என்னும் எத்தனையோ பெயர்களால் இந்தியப் பன்னாட்டு முதலாளிகளும் ஏனைய பன்னாட்டு முதலாளிகளும் நடத்திவரும் கொள்ளைச் சுரண்டலிலிருந்து தமிழ்நாட்டையும் அதன் இயற்கை வளங்களையும் சுற்றுச் சூழலையும் காத்திட யாரால் முடியும்?

✱ வடக்கு வடக்கில் வாழ்ந்து கொண்டும், தெற்கு தெற்கில் தேய்ந்து கொண்டும் இருந்த நிலை மாறி, வடக்கே தெற்கில் வந்து குடியேறி, தெற்கைத் தேய்த்துக் கொண்டிருக்கும் விதத்தில் தமிழ்நாட்டில் புகுந்து நம்முடைய நிலத்தையும் வளத்தையும் தொழில் வணிகத்தையும் கைப்பற்றிக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் மார்வாரிகளையும் குசராத்தி சேட்டுகளையும் விரட்டியடித்திட யாரால் முடியும்?

✱ திரைப்படம், தொலைக்காட்சி உள்ளிட்ட செய்தி ஊடகங்களில் நஞ்சாய்ப் பரவி நாட்டைக் கெடுக்கும் மேற்கத்திய, பார்ப்பனியப் பண்பாட்டுச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்தவும் வளமார் தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்திப் பேணி வளர்க்கவும் யாரால் முடியும்?

✱ நாளும் நாளும் பெருகிவரும் வேலையில்லா இளைஞர் கூட்டத்திற்கு வேலை கொடுக்கவும், வேலையில் இருப்பவர்களின் வேலையைப் பாதுகாக்கவும் யாரால் முடியும்?

✱ தமிழ்ச் சமூகத்தை இன்றளவும் இழிவுபடுத்தி வரும் தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஆதிக்கச் சக்திகளும் அரசு இயந்திரமும் நடத்தி வரும் வன்கொடுமைத் தாக்குதலுக்கு முடிவு கட்டவும் யாரால் முடியும்?

✱ ஒடுக்குண்ட மக்களுக்கு அனைத்து வகைக் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் உரிய இட ஒதுக்கீடு கிடைக்கச் செய்திடவும், இன்றளவும் பார்ப்பன ஆதிக்கக் கூடாரங்களாகத் திகழும் அய்.அய்.டி. போன்ற உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை மீட்டெடுத்து அனைத்து மக்களுக்கும் உரித்தாக்கிடவும் யாரால் முடியும்? .

இன்னும் இதுபோன்ற பல கேள்விகளையும் நாம் கேட்டுப் பார்க்கலாம். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை ஒன்றே ஒன்றுதான். முடியாது, முடியவே முடியாது. இவர்களில் எவராலும் இவற்றில் எதையும் செய்ய முடியாது.

ஏனென்றால், நமது தமிழ்த் தேசம் தில்லிக்கு அடிமை நாடாக இருக்கும்வரை நாம் தேர்ந்தெடுக்கும் சட்டப் பேரவை அடிமைக் கங்காணிகளின் பேரவையாகவே இருக்கும். நாம் தேர்ந்தெடுக்கும் மாநில அரசும் அடிமைக் கங்காணிகளின் அரசாகவே இருக்கும்.

நமது தேசிய அடிமைத்தனத்தைப் போக்கவும், உள்ளிருந்து கொல்லும் சாதியத்திலிருந்து விடுபடவும் தமிழ்த் தேசிய சமூக நீதிக்காக நாம் போராடியாக வேண்டும். இந்தப் போராட்ட அரசியலுக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேர்தல் என்னும் கேலிக் கூத்தால் தீமையுண்டாகுமே தவிர நன்மையுண்டாகாது.

அடிமைத் தேசத்தில் அடிமைக் கங்காணிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் இந்தத் தேர்தலில் யாருக்கும் வாக்களிக்காதீர்கள்! கொள்கைவழியில் நின்று போராடும்அரசியலுக்கு ஆதரவு தாருங்கள்!

*(இந்த அறிக்கை ஆயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை, விருதுநகர், ஈரோடு, கோவை, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் பொது மக்களிடையே பரப்பப்பட்டது. அம்பத்தூரில் சென்ற 06-05.01 முழுநாளும் த.த.இ. தலைமைக் குழு உறுப்பினர் தோழர் சிவ. காளிதாஸ் தலைமையில் தோழர்கள் வீடுவீடாகச் சென்று அறிக்கை கொடுத்து விளக்கிப் பேசினர். எழுப்பப்பட்ட பல்வேறு வினாக்களுக்கும் விடையளித்தனர். இந்தப் பரப்புரையோடு கூடவே உண்டியல் ஏந்தி நிதியும் திரட்டினர். பரப்புரையில் பொதுச் செயலாளர் தோழர் தியாகுவும் கலந்து கொண்டார்.)*

## தமிழ்த்தேசம் காக்க நன்கொடைகள்!

| | |
|---|---|
| பாலாஜி | ரூ. 5,000 |
| மேச்சேரியான் | - 5,000 |
| அரி பரந்தாமன் | - 1,000 |
| சி. நரேஷ்குமார், அம்மூர். | - 700 |
| சித்தூர் பாலாஜி | - 500 |
| எழில் சுப்பிரமணியன், திருப்பூர். | - 500 |
| உதகை கார்த்தி | - 250 |
| கவிஞர் தமிழேந்தி | - 200 |
| கவிஞர் குயில்தாசன் | - 100 |
| தாய்த் தமிழ் இலக்கிய மன்றம், மதுரை. | - 100 |
| அர்ச்சுனன், தேவாரம் | - 100 |
| ச. தமிழினியன் | - 100 |

**தமிழ்த் தேசம்**

**ஆண்டு நன்கொடை ரூ. 100/-**

பணம் அனுப்ப வேண்டிய முகவரி : தமிழ்த் தேசம்
எண் 4, சிறிராமுலு தெரு, வெங்கடாபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600 053.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழேந்தி இல்லத் திருமணம்!

கவிஞர் தமிழேந்தி - இராணி ஆகியோரின் இளைய மகள் யு.ரா. ரஷ்யா (எ) கனிமொழி - அ. அறிவுக்கடல் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 9.3.2001 மாலை மண்ணச்சநல்லூரில் இனிது நடைபெற்றது. மணமக்கள் சார்பில் தமிழ்த் தேசம் ஏட்டிற்கு ரூ. 200/- நன்கொடை அனுப்பப்பட்டுள்ளது. நன்றி! வாழ்க மணமக்கள்!

★

## சமூக அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மனித நேயப் பேரவை சார்பில் சமூக அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு பெண்ணாடம் அருகில் உள்ள முருகன்குடியில் உள்ள அறிவு மழலையர் தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது.

தோழர் க. முருகன் (மனித நேயப் பேரவை) தலைமையில் நடந்த இவ்வரங்கிற்குத் திரு. செ. அருணாசலம் முன்னிலை ஏற்றார்.

தோழர் பெ. மணியரசன் ''உலகமயமாக்கலும் உழவர்களின் துயரும்'' என்னும் தலைப்பிலும் தோழர் தியாகு ''தமிழ்த் தேசியமும் சாதி ஒழிப்பும்'' என்னும் தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்.

முன்னதாகத் திரு மு. பழனிவேல் வரவேற்புரையாற்ற நிறைவாகத் தோழர் ச. பஞ்சநாதன் நன்றியுரை யாற்றினார்.

★

## அறிவு இல்லத் திருமணம்

கவிஞர் குயில்தாசன் - அற்புதம் ஆகியோரின் மகளும் சிறையிலிருக்கும் பேரறிவாளன் தங்கையுமான அருள்செல்விக்கும் முனைவர் கா. தனசேகரனுக்கும் சென்ற பிப்ரவரி 4ஆம் நாள் விருத்தாசலத்தில் திருமணம் இனிது நடைபெற்றது. கவிஞர் அறிவுமதி வரவேற்க, திரு. பழ. நெடுமாறன் தலைமையேற்க, திரு. நா. அருணாசலம் முன்னிலை வகிக்க, தோழர்கள் வே. ஆனைமுத்து, பெ. மணியரசன், சுபவீ, விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், ஆனூர் செகதீசன், தா.செ. மணி முதலானோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர் தியாகு நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார். மணவிழாவை முன்னிட்டு கவிஞர் குயில்தாசன் தமிழ்த் தேசம் ஏட்டிற்கு ரூ. 100/- நன்கொடை அனுப்பியுள்ளார். மிக்க நன்றி! வாழ்க மணமக்கள்!

*

## பிறந்த நாள்

அம்முரைச் சேர்ந்த தோழர் சி. நரேஷ்குமார் - சுனிதா ஆகியோரின் குழந்தை ந. சிந்து பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்த் தேசத்திற்கு ரூ. 700/- நன்கொடை தரப்பட்டது. நன்றி! வாழ்க சிந்து!

## தாய்த் தமிழ்க் கல்வி நெடும் பயணம்

தமிழ்வழிக் கல்வி தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்தித் தாய்த் தமிழ்க் கல்விப் பணி சார்பில் தாய்த் தமிழ்க் கல்வி நெடும்பயணம் குமரி முதல் சென்னை வழியாகக் கோவை வரை நடைபெற்றது.

சென்ற சனவரி 20 காலை குமரி முனையில் தொடங்கிய பயணம் தமிழகத்தின் எல்லா மாவட்டங்கள் வழியாகவும் சென்று, வழியெல்லாம் தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் கலை நிகழ்ச்சிகள் வாயிலாகக் கருத்துப் பரப்புரை செய்யப்பட்டது.

தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவான அரசியல் கட்சிகள், தமிழ் இயக்கங்கள், அமைப்புகள், மன்றங்களைச் சேர்ந்தவர்கள் தாய்த் தமிழ்க் கல்வி நெடும்பயணத்தை வரவேற்று ஆதரித்தனர். தமிழ் தமிழர் இயக்கம் இந்த நெடும்பயணத்துக்கு முழு ஆதரவு நல்கியது.

பொதுச்செயலாளர் தோழர் தியாகு நான்கு நாட்கள் பயணத்தில் முழுமையாகக் கலந்து கொண்டு பொதுக் கூட்டங்களிலும் தெருமுனைக் கூட்டங்களிலும் உரையாற்றினார்.

*

## பாவாணர் - பட்டுக்கோட்டை அழகிரி நூற்றாண்டு விழா

சென்ற மார்ச்சு 17ஆம் நாள் நெல்லிக்குப்பத்தில் தமிழ் தமிழர் இயக்கம் சார்பில் பாவாணர் - பட்டுக்கோட்டை அழகிரி நூற்றாண்டு விழா முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. பட்டுக்கோட்டை அழகிரி குறித்துத் தோழர் தியாகுவும் பாவாணர் குறித்துச் சொல்லாய்வறிஞர் சுருளியாரும் சிறப்புரையாற்றினர். தோழர் சுப. வீரபாண்டியனும், திரு பழ. நெடுமாறனும் நிறைவுரை ஆற்றினர்.


தோழர் **தியாகு** எழுதிய

**மே நாள் சுவடுகள்**

(மே நாள் வரலாற்றைச் சொல்லும் கையேடு)

தமிழ்த் தேசம் வெளியீடு!

விலை 5 ரூபாய் மட்டும்!

தமிழ்த் தேசம் அலுவலகத்தில் கிடைக்கும்.

அஞ்சலில் வேண்டுவோர் தமிழ்த் தேசம் முகவரிக்கு எழுதுக!




படிப்பகம்

www.padippakam.com

# 3 குறுக்கு விசாரணைக் கூண்டில் துக்ளக் 'சோ'

**'சோ'** ராமசாமி - நாடக, திரைப்படக் கலைஞர். சட்டம் படித்த வழக்கறிஞர். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர். 'துக்ளக்' வார ஏட்டின் ஆசிரியர். அவ்வப்போது அரசியல் தரகு வேலை செய்பவர். தமிழ் வழிக் கல்வி, தமிழ் வழிபாடு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு, தமிழ் ஈழம் எல்லாவற்றுக்கும் எதிரானவர். ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. போன்ற இந்துத்துவ அமைப்புகளின் தீவிர ஆதரவாளர். பார்ப்பனியத்தில் உறுதியான நம்பிக்கை கொண்ட பார்ப்பனர். அவர் தனது துக்ளக் ஏட்டில் 'வெறுக்கத்தக்கதா பிராமணீயம்?' என்ற தலைப்பில் ஒரு தொடர் கட்டுரை எழுதினார். 04-10-2000 இதழில் தொடங்கி 31-01-2001 முடிய 16 பகுதிகளாக வெளிவந்த இந்தத் தொடர் கட்டுரையை அடிப்படையாக வைத்தே இங்கு 'சோ'வைக் கூண்டில் ஏற்றுகிறோம்.

எங்கள் பகைவர் திரு 'சோ' அவர்களே!

1. இந்துச் சமூகத்திற்குரிய நால்வருண அமைப்பில் அனைவரை விடவும் 'மேல்' வருணமாகப் பார்ப்பனர்கள் இருந்ததையும் இருப்பதையும் உங்களால் மறுக்க முடியுமா? இந்த மேலாதிக்கத்தையும் உயர்வையும் நிலைநாட்டவும் நியாயப்படுத்தவுமான கருத்தமைப்பை வேறெவரைக் காட்டிலும் பார்ப்பனர்களே வகுத்து உருவாக்கியதையும், இந்த அமைப்பினால் வேறு எவரைக் காட்டிலும் பார்ப்பனர்களே கூடுதலாக நன்மை அடைந்தார்கள்,

## "சாதி வெறுப்பை வளர்ப்பவர் யார்?"



அடைந்து வருகிறார்கள் என்பதையும் உங்களால் மறுக்க முடியுமா? இதனால்தான் இந்தக் கருத்தமைப்பு பார்ப்பனியம் என்று அழைக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியாதா?

2. பிராமணியம் என்பதோடு சத்ரியம், வைசியம், சூத்ரியம் ஆகியவையும் சேர்ந்து நான்கு இயங்கள் இருக்க வேண்டும் என்று வாதிடுகிறீர்கள். நால்வருண அமைப்பைச் சமூக அறிவியல் நோக்கில் ஆராய்ந்துள்ள அறிஞர் எவராவது இப்படி நான்கு இயங்களைக் கண்டுபிடித்துச் சொன்னதுண்டா? உங்களின் இந்தக் குயுக்தியான கண்டுபிடிப்பு வருணபேத அமைப்பில் பார்ப்பனர்களின் மேலாதிக்கப் பங்கை மூடி மறைப்பதல்லாமல் வேறென்ன?

3. பிராமணர், பிராமணர் அல்லாதார் என்பது பிரித்தானியர் செய்த பாகுபாடு என்றும் திராவிட இயக்கத்தார் சத்ரியர்களையும் வைசியர்களையும் சூத்திரர்கள் என்ற வகைக்குள் அடக்கி விட்டார்கள் என்றும் குற்றஞ் சாட்டுகிறீர்கள். அப்படியானால் கோயில் கருவறைக்குள் பார்ப்பனர் அல்லாதார் நுழையக் கூடாது என்று சட்டம் செய்தது யார்? பார்ப்பனர் அல்லாதார் எவரும் அர்ச்சகராகக் கூடாது என்று வழிமறுத்ததும், இன்றளவும் வழிமறித்துக் கொண்டிருப்பதும் யார்? பிரித்தானியரா? அல்லது திராவிட இயக்கத்தவரா? நீங்களே ஒப்புக் கொண்டு இருப்பதுபோல் பிராமணர்களுக்கு ஒரு சட்டம், மற்றவர்களுக்கு ஒரு சட்டம் என்று விதி வகுத்த மனு வெள்ளைக்காரனா? அல்லது திராவிட இயக்கத்தவனா? கொஞ்சம் அயர்ந்தால்... பிரித்தானியரும் திராவிட இயக்கத்தாரும்தான் வருண-சாதி அமைப்பையே தோற்றுவித்தார்கள் என்று கதை கட்டி விடுவீர்கள்தானே?

4. பிரித்தானியர் வருவதற்கு முன்பும் வந்த பிறகும் உயர் பதவிகளைப் பார்ப்பனர்களே முற்றுரிமையாக அனுபவித்து வந்தார்கள் என்பதை நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள். இந்த

**நலங்கிள்ளி**



படிப்பகம்

www.padippakam.com



ஒரு-சாதி ஏகபோகத்தை உடைப்பதற்காகப் பார்ப்பனர் அல்லாதாருக்கு உரிய பங்கு கேட்டதிலும் ஓரளவுக்குப் பெற்றதிலும் என்ன தவறு இருக்க முடியும்? பிரித்தானிய ஆட்சியில் அதிகார வர்க்க உயர் பதவிகளில் (அய்.சி.எஸ். போன்றவை) இந்தியர்களுக்கு உரிய பங்கு வேண்டுமென்று காங்கிரஸ் இயக்கம் கேட்டது நியாயமென்றால், கல்வி வாய்ப்பிலும் வேலை வாய்ப்பிலும் பார்ப்பனர் அல்லாதாருக்கு திராவிட இயக்கம் உரிய பங்கு கேட்டதில் என்ன தவறு இருக்க முடியும்?

5. மகாபாரத காலத்திலிருந்தே பிறப்பின் அடிப்படையில் வருணம் ஏற்பட்டதாகச் சொல்கிறீர்கள். அப்படியானால் காலத்தால் மகாபாரதத்திற்கு முற்பட்டதாகிய இராமாயணத்தில் இராமன் பிறப்பின் அடிப்படையிலேயே சத்ரியனாய் இருந்ததும், அமைதியாகத் தவம் செய்த சூத்திரன் சம்புகனின் தலையைக் கொய்ததும் எப்படி நிகழ்ந்தன?

6. சத்ரிய கௌசிகர் பிராமண விசுவாமித்திரராக மாறிய கதையை எடுத்துக்காட்டி வருணம் பிறப்பால் வரவில்லை என்று மெய்ப்பிக்க முயன்றுள்ளீர்கள். அதற்காக விசுவாமித்திரர் என்ன பாடுபட்டார் என்ற கதையையும் சேர்த்துச் சொல்வீர்களா? அந்தக் கதையைப் படித்தால் எந்த சத்ரியனும் பிராமணனாக ஆசைப்பட மாட்டான் என்பதுதானே உண்மை! புராணக் கட்டுக் கதைகளைச் சொல்லி உங்கள் வாதத்தை நிலைநிறுத்த முயல்வதற்குப் பதிலாக உண்மையான வரலாற்றுச் சான்றுகளைக் காட்ட உங்களால் முடியுமா?



7. விசுவாமித்திரரின் கதை விதிவிலக்குதானே தவிர பொது விதி ஆகாது என்று மறைந்த காஞ்சிப் பெரியவர் திரு சந்திரசேகரேந்திர சுவாமிகள் கூறியிருப்பது உங்களுக்குத் தெரியாதா?

8. வருணம் குணத்தையும் வாழும் வகையையும் பொறுத்ததே தவிர பிறப்பைப் பொறுத்ததன்று என்ற உங்கள் கருத்துக்குச் சான்றாக பகவத் கீதையை எடுத்துக் காட்டுகிறீர்கள். இந்தப் பொருள்விளக்கத்தை முன்பே 'காஞ்சிப் பெரியவர்' மறுத்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? 'வேத கர்மானுஷ்டானமே வேண்டாம் என்று பிராமணன் விட்டு விட்டு இருப்பது விபரீதம், மற்றவர்களும் (சூத்திரர்கள்) வேத கர்மானுஷ்டானங்களை எடுத்துக்



கொள்ளலாம் என்பது இன்னொரு விபரீதம்... என்றுதான் பகவான் கீதையில் 'ஜட்ஜ்மெண்ட்' கொடுத்திருக்கிறார் : 'ஸ்வதர்மே நிதனம் ச்ரேய பரதர்மோ பயாவஹு' என்கிறாரே சந்திரசேகரேந்திரர், அவருக்கு ஒரு 'ஜட்ஜ்மெண்டும்' உங்களுக்கு வேறு 'ஜட்ஜ்மெண்டும்' கொடுத்திருக்கிறாரோ கிருஷ்ண பகவான்?

9. வைசியர்களையும் சூத்திரர்களையும் பெண்களையும் இழிபிறவிகள் என்று பகவத் கீதை சொல்வதுதான் உங்கள் பார்வையும் எனக் கொள்ளலாமா?

10. பகவத் கீதையில் ஓரிடத்தில் அர்ச்சுனன் கிருஷ்ணனிடம் ''அதர்மம் மிகுந்து குலப் பெண்கள் கற்பிழந்தால் வருணக் கலப்பு ஏற்பட்டு விடுமே'' என்கிறான். வருணம் பிறப்பின் அடிப்படையிலானதாக இல்லாவிட்டால் இப்படிச் சொல்லியிருக்க முடியுமா?



படிப்பகம்

www.padippakam.com

11. வர்ண தர்மம் பிறப்பின் தர்மம் என்கிறாரே காந்தியார், நீங்கள் படித்த புராணக் கதைகளை அவர் படிக்கவில்லையோ?

12. வேதம் படிக்க சூத்திரனுக்கு உரிமையில்லை என்று ஆதி சங்கரரே கூறியிருப்பது உங்களுக்குத் தெரியாதா?

13. பிராமணியக் கருத்துக்களைப் பிராமணர் அல்லாதவர்களும் ஏற்கவில்லையா என்று கேட்கிறீர்கள். பார்ப்பனியத்துக்கான பழி பார்ப்பனர் அல்லாதவர்களையும் சாரும் என்பது உங்கள் கருத்து. ஒருவன் திருட்டுக் கொடுப்பதால்தான் மற்றவன் திருட முடிகிறது என்பதால் திருட்டுக் கொடுத்தவனும் குற்றவாளிதான் என்கிறீர்களா? கொலை செய்யப்படுகிறவனுக்கும் கொலைக் குற்றத்தில் பங்கு உண்டு என்கிறீர்களா? பார்ப்பனர் அல்லாதவர் களையும் பார்ப்பனியம் ஆட்டிப் படைப்பதுதான் அதன் மிகப் பெரும் தீங்கு என்பது உங்கள் அறிவுக்கு எட்டவில்லையா? அடிமைப்பட்டவர்களையும் ஆதிக்கக் கருத்தியல் ஆட்கொண்டு விடுவதே ஆதிக்கச் சக்திகளின் வெற்றிக்கு அடிப்படைக் காரணம் என்பதைப் பார்க்க விடாமல் உங்கள் பார்வையை மறைப்பது என்ன?

உங்கள் காலத்தில் சூத்திரர்களாகப் பிறந்த யார் யாரெல்லாம் பிராமணர்களாக மாறியுள்ளார்கள்? பிறப்பினால் அல்லாமல் குணத்தினாலும் வாழும் வகையினாலும் பிராமணர்களாக உயர்ந்தவர்களின் பட்டியலை உங்களால் தர முடியுமா?

14. எல்லாருமே முதலில் பிரம்மனால் சமமாகப் படைக்கப்பட்டு, பிராமணர்களாகத்தான் இருந்தார்கள், பிறகுதான் நால் வருணத்தவராக பிரிக்கப்பட்டார்கள் என்று 'ப்ருகு' சொன்னதாக எழுதுகிறீர்கள். எல்லாருமே பிராமணர்களாக இருந்து பிராமணத் தொழிலைச் செய்து கொண்டிருந்த போது, சூத்திரர்கள் யாருமே அந்தக் கட்டத்தில் இல்லை என்றால் உழுது விதைத்து அந்தப் பிராமணர்களுக்கு உணவும் உடையும் கொடுத்தது யார்?

15. பிராமணனைக் கொல்லக் கூடாது என்றும் மரண தண்டனையிலிருந்து அவனுக்கு விலக்கு உண்டு என்றும் மனுநீதி கூறுவதை நீங்களே எடுத்துக்காட்டுகிறீர்கள். சட்டம் படித்துள்ள உங்களுக்கு 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்பதில் இம்மியளவேனும் நம்பிக்கை இருந்தால் இந்த மனுநீதியைக் கொடிய அநீதி என்று கண்டித்திருக்க வேண்டாமா?

16. மனு தர்மம் வழங்கிய சலுகைகளுக்காக பிராமணர்கள் பல சுமைகளைத் தாங்கியதாகவும் இன்று பல வகுப்பினர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டாலும் எவ்விதச் சுமையும் ஏற்றப்படவில்லை என்றும் அங்கலாய்க் கிறீர்கள். காலங்காலமாகப் பார்ப்பனர்கள் அனுபவித்து வரும் சிறப்புச் சலுகைகளை சுமைகள் என்றும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமையைச் சலுகை என்றும் திரித்துச் சொல்ல உங்களைத் தவிர வேறு யாரால் முடியும்?



17. பாகவத புராணத்தில் வியாசர் சொல்கிறபடி சத்ரியனும் வைசியனும் கூட வேதம் படிக்கலாம் என்று எடுத்துக்காட்டுகிறீர்கள். ஆனால், பெண்களும் சூத்திரர்களும் வேதம் பயிலக் கூடாது என்று அதே பாகவத புராணம் விதிப்பது குறித்து என்ன சொல்கிறீர்கள்? ஒவ்வொரு வகையிலும் பார்ப்பனியம் சூத்திரர்களை மட்டுமில்லாமல் பெண்கள் அனைவரையுமே இழிவாகக் கருதுவதற்கு இதுவும் ஒரு சான்று அல்லவா? உங்கள் பார்ப்பனியத்தின் ஒரு பகுதியாக உள்ள ஆணாதிக்கச் சிந்தனையினால்தான் பெண்ணுரிமை பற்றிய அக்கறையே உங்களுக்கில்லை என்று வைத்துக் கொள்ளலாமா? இந்தக் கட்டுரைத் தொடர் முழுவதிலும் வருண பேதத்தைத் தொட்டுக் காட்டி அதற்குச் சமாதானமாவது சொல்கிற நீங்கள், இந்து மதத்தின் பெயரில் வருண தர்மம் பெண்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லையே, ஏன்?



படிப்பகம்

www.padippakam.com

18. இன்றைய இட ஒதுக்கீடு முறையை எடுத்துக்காட்டி அன்றைய வருண - சாதிப் பாகுபாட்டை நியாயப்படுத்த 'பகீரதப் பிரயத்தனம்' செய்துள்ளீர்கள். எந்த இட ஒதுக்கீடு முதலில் வந்தது? எதற்கு மாற்றாக எது வந்தது? எது வினை? எது எதிர் வினை? பார்ப்பனியத்தின் இட ஒதுக்கீட்டுக்கு மாற்றாகப் பிறந்த சமூக நீதி இட ஒதுக்கீட்டைக் கொச்சைப்படுத்துகிற நீங்கள் வருண-சாதிப் பாகுபாட்டைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவது ஏன்?

19. எது எதற்கோ மகாபாரதக் கதைகளைத் துணைக்கு அழைக்கும் நீங்கள் அதே மகாபாரதத்தில் வரும் ஏகலைவனின் கதை பற்றி என்ன சொல்கிறீர்கள்? துரோணர் குருதட்சணையாக ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்டது ஏன்?



வில் வித்தைப் போட்டியில் கலந்து கொள்ள கர்ணன் விரும்பியபோது 'தேரோட்டி மகன்' என்று பிறப்பைச் சொல்லி அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது ஏன்? நீங்கள் போற்றும் தரும புத்திரன் அப்போது இறுக வாய் மூடி நின்றது ஏன்?

20. பெரியாரும் பகுத்தறிவுவாதிகளும் பிறப்பின் பெயரால் துவேஷத்தைப் போதிப்பவர்கள் என்று தூற்றுகிறீர்கள்.

சூத்திரப் பயலே! அடியே, சூத்திரச்சி! பறப் பயலே! பறச்சி! இப்படி எல்லாம் உழைக்கும் மனிதர்களை வயதுக்காகக் கூட மரியாதை தராமல் அழைத்துக் கொண்டிருந்தவர்கள் யார்? இன்றளவும் விழிப்புணர்வு வளராத இடங்களில் இதே போல் அழைத்துக் கொண்டிருப்பவர்கள் யார்? நாயும் பன்றியும் ஆடும் மாடும் நடமாடும் தெருவில் மனிதன் நுழையக் கூட தடை விதித்தவர்கள் யார்? தீண்டாமை என்றும் காணாமை என்றும் பற்பல சொல்லொண்ணாக் கொடுமைகளை இழைத்தவர்கள் யார்? இவர்களெல்லாம் சாதித் துவேஷம் செய்பவர்கள் அல்ல, இந்தக் கொடுமைகளை எதிர்த்து காலமெல்லாம் போராடிய தந்தை பெரியாரும் அவர்தம் தொண்டர்களும்தான் சாதித் துவேஷிகளா?

20. சாதித் துவேஷம் பார்க்கக் கூடாது என்கிறீர்களே, நீங்கள் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டீர்களா? ஒரே ஒரு சாதி மறுப்புத் திருமணமாவது நீங்கள் நடத்தி வைத்ததுண்டா? சாதி மறுப்புத் திருமணங்களை ஓர் இயக்கமாகவே வளர்த்து நாடெங்கும் நடத்தி வைத்ததில் பெரியாரின் பெருந்தொண்டு குறித்து உங்களுக்கு என்ன தெரியும்?

21. உங்கள் காலத்தில் சூத்திரர்களாகப் பிறந்த யார் யாரெல்லாம் பிராமணர்களாக மாறியுள்ளார்கள்?

**வைசியர்களையும் சூத்திரர்களையும் பெண்களையும் இழிபிறவிகள் என்று பகவத் கீதை சொல்வதுதான் உங்கள் பார்வையும் எனக் கொள்ளலாமா?**

பிறப்பினால் அல்லாமல் குணத்தினாலும் வாழும் வகையினாலும் பிராமணர்களாக உயர்ந்தவர்களின் பட்டியலை உங்களால் தர முடியுமா?

22. 'யாசிக்காமல் கிடைப்பது தனக்கு வேண்டாம் என்று தன்னுடைய வயல்களில் ஒருவனால் தள்ளப்பட்ட தானியங்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்வது, கடை வீதியில் யாருக்கும் தேவையற்றதாகத் தெருவில் இறைந்து கிடக்கிற தானியங்களை எடுத்துக் கொள்வது... இவை பிராமணனுக்கு விதிக்கப்பட்ட வழிகள்' என்று நாரதர் சொல்வதை எடுத்துக் காட்டுகிறீர்கள். நன்று 'சோ' அவர்களே! ஒரு சுத்தப் பிராமணர் என்ற முறையில் நீங்கள் எப்போது வயல்களுக்குச் சென்று தானியம் பொறுக்கப் போகிறீர்கள்? எப்போது மயிலைக் கடை வீதியில் இறைந்து கிடப்பவற்றைப் பொறுக்கித் தின்னப் போகிறீர்கள்?

*(குறுக்கு விசாரணை இன்னும் முடியவில்லை)*



படிப்பகம்

www.padippakam.com

## தோழர் கி. வெங்கட்ராமனின் விடைக்கு விடை :

# தடுமாறும் 'தன்னுரிமை'

'தமிழர் கண்ணோட்டம்' பிப்ரவரி இதழில் 'தன்னுரிமை விவாதம் : தோழர் தியாகுவிற்கு விடை!' என்ற தலைப்பில் தோழர் கி. வெங்கட்ராமன் கட்டுரை வரைந்துள்ளார். நான் எழுதிய 'தன்னுரிமை' பற்றிய விவாதக் குறிப்பை மறுத்து எனக்கு இருக்கும் ''குழப்பத்தை விளக்கி'' இதற்கு முன் தமிழர் கண்ணோட்டத்தில் எழுதிய கட்டுரையைத் தோழர் கி.வெ. நினைவுபடுத்துகிறார். அவரது கட்டுரையை மறுத்து **தமிழ்த் தேசத்தில்** நான் எழுதியதையும் மற்றவர்கள் எழுதியதையும் அவர் குறிப்பிடுகிறார்.

''தமிழ் தமிழர் இயக்கத்தின் தலைவர் தோழர் சுப. வீரபாண்டியன் தன்னுரிமையை ஆதரித்து ஆகஸ்டு - திசம்பர் 2000 **தமிழ்த் தேசம்** இதழில் தமது கருத்தை வெளியிட்டார்,'' என்று தோழர் கி.வெ. சொல்லி வைக்கிறாரே தவிர இந்த விவாதத்தில் அந்தக் கருத்துக்கு உரிய இடம் என்ன என்பதை அவர் விளக்க முற்படவே இல்லை.

தோழர் கி.வெ.யின் கட்டுரை இரு வாதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது :

1) சுயநிர்ணயம் என்பதும் சுயநிர்ணய உரிமை என்பதும் ஒன்றுதான்.

2) தன்னுரிமைப் புரட்சி, விடுதலைப் புரட்சி இரண்டும் ஒன்றுதான்.

இந்த இரண்டு வாதங்களையுமே தோழர் சுபவீ ஏற்றுக் கொள்ளவில்லை. முதலாவதாக, ஒரு செயல், அதற்கான உரிமை என்னும் இரு கூறுகளையும் விளக்குவதற்குத் தன்னுரிமை என்னும் சொல் போதுமானதன்று என்ற விளக்கத்தில் தோழர் சுபவீ உடன்படுகிறார்.

இரண்டாவதாக, தன்னுரிமைப் போராட்டம் கால ஓட்டத்தில் விடுதலைப் போராட்டமாக மாறும் வாய்ப்புகள் உள்ளன என்ற கருத்தைச் சொல்வதன் மூலம், தன்னுரிமையையும் விடுதலையையும் அவர் வேறுபடுத்திப் பார்க்கிறார்.

இந்தக் கருத்து வேறுபாடுகளை எடுத்துக்காட்டாமல், சுபவீயும் தன்னுரிமையைத்தான் ஆதரிக்கிறார் என்று போகிற போக்கில் கி.வெ. சொல்லி வைப்பது ஏனோ?

தோழர் கி.வெ. சொல்கிறார் :

''தமிழ்த் தேசம் நடத்தும் இந்த விவாதம் புதிய கருத்துக்களை வைத்து விளக்குவதைக் காட்டிலும் **தரம் தாழ்ந்த சொல்லாடல்களில்** இறங்கி, **'விவாத சுகம்'** காணுகிற போக்கையே பிரதிபலித்தது. வழங்குவதற்கு 'சரக்கு' ஏதுமில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.'' (அழுத்தம் எனது)

இந்த விவாதத்தில் பங்கேற்றவர்களில் எவரும் - நானோ தோழர் சுப்வீயோ தோழர் கார்முகிலோ தோழர் வைகையோ மற்றெவருமோ - தரம் தாழ்ந்த சொல்லாடல்கள் எதிலும் இறங்கவில்லை என்பதில் உறுதியாக உள்ளேன். **யார் எந்தக் கட்டுரையில் எப்போது எந்த இடத்தில் தரம் தாழ்ந்த சொல்லாடல்களில் இறங்கினார் என்பதைத் தோழர் கி.வெ. திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டட்டும்.**

சுயநிர்ணய உரிமை வேறு, சுயநிர்ணயம் வேறு, இந்த இரண்டுக்கும் சேர்த்து 'தன்னுரிமை' என்ற ஒரே சொல்லைப் பயன்படுத்துவது குழப்பத்தையே விளைவிக்கும் என்று தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறேன். தோழர் லெனினும் வேறு சிலரும் 'சுயநிர்ணயம்' என்பதையும்



'சுயநிர்ணய உரிமை' என்பதையும் ஒரே பொருளில் கையாள்வதைத் தோழர் கி.வெ. எடுத்துக்காட்டியிருந்தார். அதற்கு என்னுடைய விடை இதுதான் :

சுயநிர்ணயம், சுயநிர்ணய உரிமை இரண்டும் வெவ்வேறானவை என்றாலும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பதால், சில சந்தர்ப்பங்களில் ஒன்றினிடத்தில் மற்றொன்றைப் பயன்படுத்த முடியும். இப்படிப் பயன்படுத்துவதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால், இரண்டுக்கும் சேர்த்து ஒரே சொல்லைப் பயன்படுத்துவதற்கு இது போதாது. இரண்டுக்கும் சேர்த்து ஒரே சொல்லைப் பயன்படுத்துவதாக இருந்தால் அவை முழுதொத்தவையாக இருக்க வேண்டும். அதாவது எந்த இடத்திலும் எந்தச் சூழலிலும் இரண்டும் ஒன்றே என்பதை மெய்ப்பித்தாக வேண்டும். இந்த அடிப்படையில்தான் ''இரண்டும் ஒரே பொருளைக் குறிக்கும்படியான இரண்டு இடங்களை கி.வெ.யால் எடுத்துக்காட்ட முடியுமென்றால் இரண்டும் வேறு வேறு பொருளைக் குறிக்கும்படியான இருபது இடங்களையாவது என்னால் எடுத்துக்காட்ட முடியும்'' என்று எழுதியிருந்தேன். மற்றபடி நான் சவால் ஏதும் விடவில்லை.

செயலும் செயலுக்கான உரிமையும் ஒன்றல்ல. மணமுறிவும் மணமுறிவுக்கான உரிமையும் ஒன்றல்ல. பிரிந்து செல்வதும் பிரிந்து செல்வதற்கான உரிமையும் ஒன்றல்ல. தன்தீர்வும் தன்தீர்வுக்கான உரிமையும் ஒன்றல்ல. இந்த எளிய உண்மையைத் தோழர் கி.வெ. போன்றவர்களுக்கு விளங்கச்

**தியாகு**



படிப்பகம்

www.padippakam.com

செய்திட இவ்வளவு பாடுபட வேண்டியிருக்குமென்று நான் எண்ணிப் பார்க்கவில்லை. அதனால்தான் ''இரண்டும் வேறு வேறு பொருளைக் குறிக்கும்படியான'' இடங்களைப் பெருமளவில் எடுத்துக்காட்டும் முயற்சியில் நான் இறங்காமல் இருந்தேன். இப்போது வேறு வழியில்லை, ஒரு சில இடங்களையாவது எடுத்துக்காட்டத்தான் வேண்டும். அதற்கு முன் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் :

சுயநிர்ணயம், சுயநிர்ணய உரிமை இரண்டும் முழுதொத்தவை, இரண்டும் ஒன்றேதான் என்பதை மெய்ப்பிக்க தோழர் கி.வெ. எம்முயற்சியும் செய்யவில்லை. இரண்டும் ஒன்றைக் குறிக்கும்படியான சிற்சில இடங்களை எடுத்துக் காட்டுவதே இரண்டும் முழுதொத்தவை என்பதற்கான அறுதிச் சான்றாகி விடாது. இரண்டும் முழுதொத்தவை என்பதை மெய்ப்பிக்காத வரை இரண்டுக்கும் சேர்த்து ஒரே சொல்லைப் பயன்படுத்துவது குழப்பத்துக்கே வழிவகுக்கும். தோழர் லெனின் தேசிய இனச் சிக்கல் குறித்து எழுதிய நூல்களிலும் கட்டுரைகளிலும் இரண்டுக்கும் சேர்த்து ஒரே சொல்லைப் பயன்படுத்தவில்லை. எனக்குத் தெரிந்த வரை சுயநிர்ணயம், சுயநிர்ணய உரிமை இரண்டுக்கும் சேர்த்து ஒரே சொல்லைப் பயன்படுத்தும் முயற்சி வேறு எந்த மொழியிலும் நடைபெறவில்லை.

சுயநிர்ணயமும் சுயநிர்ணய உரிமையும் ஒன்றே என்பது லெனினுக்கோ மற்றவர்களுக்கோ தெரியாமலே போய் கி.வெ. போன்றவர்கள் முதன்முதலாக அதனைக் கண்டுபிடித்திருக் கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாமா?

போகட்டும், சுயநிர்ணயம் வேறு, சுயநிர்ணய உரிமை வேறு என்பதைக் காட்டும்படியான லெனின் மேற்கோள்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

(என் மொழிபெயர்ப்பில் தோழர் கி.வெ. குறை காண்பது பற்றி எனக்கு வருத்தமில்லை. வேறு எவர் குறை காண்பது பற்றியும் கூட எனக்கு வருத்தமில்லை. ஆனால் அந்தக் குறைகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கும் அளவுக்குக் கி.வெ. சென்றிருப்பதுதான் வருத்தத்துக்குரியது. எனவேதான் லெனின் மேற்கோள்களைத் தரும் போதெல்லாம் பின்குறிப்பாக ஆங்கில வாசகத்தையும் தர வேண்டியுள்ளது. நல்ல வேளையாக நான் ருஷ்ய மொழி கற்றுக் கொள்ளாமல் இருந்து விட்டேன்!)

லெனின் சொல்கிறார் : [1]

''ஆனால் மார்க்சியர்கள் சனநாயகத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் துரோகம் செய்யக் கூடாது என்றால் தேசிய இனச் சிக்கலில் ஒரு தனிக் கோரிக்கையை ஆதரித்துப் போராட அவர்கள் கடமைப்பட்டவர்களாய் இருக்கும் ஒரு நேர்வு உள்ளது; அதுதான் தேசங்களின் சுயநிர்ணய **உரிமை** (ருஷ்ய சோசல்-சனநாயகத் தொழிலாளர் கட்சியின் வேலைத் திட்டத்தின் பிரிவு 9), அதாவது அரசியல் பிரிவினைக்கான உரிமை.'' (அழுத்தம் லெனினது)

சுயநிர்ணய உரிமை என்பதில் உரிமை என்ற சொல்லுக்குத் தோழர் லெனின் கொடுத்துள்ள அழுத்தத்தைக் கவனிக்க வேண்டுகிறேன். சுயநிர்ணயமும் சுயநிர்ணய உரிமையும் ஒன்றுதான் என்றால் இந்த மேற்கோளில் சுயநிர்ணய உரிமை என்பதை சுயநிர்ணயம் என்பதாலேயே மாற்றீடு செய்ய முடியும் என்றாகிறது. அப்படி மாற்றீடு செய்து படித்துப் பாருங்கள், லெனினது கருத்து சிதைந்து போகக் காண்பீர்கள். உரிமையை வலியுறுத்துகிற அவரது நோக்கம் எப்படியும் வீரியமிழந்து விடும். உரிமைக்கு அவர் கொடுத்த அழுத்தம் ஒழிந்து போகும்.

லெனின் சொல்கிறார் : [2]

''அன்பிற்குரிய திருவாளர் கலைப்புவாதி அவர்களே, சுயநிர்ணய **உரிமை** என்பது ஒரு மைய நாடாளுமன்றம் இச்சிக்கலுக்குத் தீர்வு காண்பதைக் குறிப்பது **அன்று** என்பது உறுதி, **பிரிந்து போகும் சிறுபான்மையின்** நாடாளுமன்றமோ பேரவையோ பொதுசன வாக்கெடுப்போ இச்சிக்கலுக்குத் தீர்வு காண்பதையே அது குறித்திடும்.'' (அழுத்தம் லெனினது)

இங்கேயும் **சுயநிர்ணய உரிமை** என்பதில் **உரிமை** என்ற சொல்லுக்கு லெனின் தனி அழுத்தம் கொடுத்திருப்பதைக் கவனிக்கவும்.

இங்கே சுயநிர்ணய உரிமை என்பதை சுயநிர்ணயம் என்பதால் மாற்றீடு செய்து படித்துப் பாருங்கள். உரிமையும் போய் விடும், உரிமைக்கு லெனின் கொடுத்த அழுத்தமும் போய் விடும். சுயநிர்ணய உரிமை என்பதற்குப் பதில் தன்னுரிமை என்று போட்டுப் பாருங்கள், அழுத்தத்தை எங்கு கொண்டு போய்ச் சேர்ப்பது? அது மட்டுமல்ல, இந்தத் தன்னுரிமை சுயநிர்ணய உரிமையைக் குறிக்குமா, சுயநிர்ணயத்தைக் குறிக்குமா என்று ஒவ்வொரு வாசகரிடமும் போய்ச் சொல்லுவது யார்?

லெனின் சொல்கிறார் : [3]

''நாம் 'சுயநிர்ணய உரிமையை மீறாமல் இருக்கும் பொருட்டு', சூழ்ச்சிக்காரத் திருவாளர் செம்கோவ்ஸ்கி எண்ணிக் கொள்வது போல் '**பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிப்பது**' **அல்ல**, பிரிந்து போகும் வட்டாரம் **தானே** இச்சிக்கல் குறித்து முடிவெடுக்கும் உரிமைக்கு ஆதரவாக வாக்களிப்பதே நம் கடமை.'' (அழுத்தம் லெனினது)

இங்கு பிரிந்து போகும் செயலையும் பிரிந்து போகும் உரிமையையும் லெனின் வேறுபடுத்திக் காட்டுவதைக் கவனிக்க வேண்டும். சுயநிர்ணய உரிமையை மீறாமல் இருப்பது என்றால் பிரிந்து போகும் உரிமையை ஆதரிப்பதுதானே தவிர பிரிந்து போவதையே ஆதரிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

லெனின் சொல்கிறார் : [4]

'' 'மணமுறிவுக்கான **உரிமை**' என்றால் மணமுறிவுக்கு ஆதரவாக **வாக்களிக்க** வேண்டிய தேவை இல்லை என்பதைப் புரிந்து கொள்வது திரு செம்கோவ்ஸ்கியின் மன ஆற்றல் களுக்கும் கூட கடினமன்று என்றே தோன்றும்!'' (அழுத்தம் லெனினது)

இங்கேயும் உரிமைக்கு லெனின் தரும் அழுத்தம் பொருள் பொதிந்தது. சுயநிர்ணய உரிமை பிரிந்து போகும் உரிமையைக் குறிக்கிறது. பிரிந்து போகும் உரிமை மணமுறிவுக்கான உரிமையை ஒத்தது.

**மணமுறிவும் மணமுறிவுக்கான உரிமையும் வேறு வேறு என்றால், பிரிவினையும் பிரிவினைக்கான உரிமையும் வேறு வேறு. பிரிவினையும் பிரிவினைக்கான உரிமையும் வேறு வேறு என்றால், சுயநிர்ணயமும் சுயநிர்ணய உரிமையும் வேறு வேறுதான்.**

லெனின் சொல்கிறார் : [5]

''சுயநிர்ணய **உரிமை** என்ற கோட்பாடு **ஒடுக்குகிற ஆளும்** தேசங்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்திடம் எவ்வகை கிளர்ச்சிப் பரப்புரையைக் கோருகிறதோ அதிலிருந்து சுவீடனின் தேசியவாத சனநாயகவாதிகள் விலகி நிற்கக் கூடும்.'' (அழுத்தம் லெனினது)

இங்கே **சுயநிர்ணய உரிமை** என்பதில் **உரிமை** என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் லெனின் தனியாக அழுத்தம் கொடுப்பதைக் க்வனிக்க வேண்டும். சுயநிர்ணயமும் சுயநிர்ணய உரிமையும் ஒன்றுதான் என்றால் இப்படி அழுத்தம் கொடுப்பது பொருளற்றதாகி விடும்.

லெனின் சொல்கிறார் : [6]

''சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது 'கடைக் கோடி முதலாளித்துவ தேசியவாதத்தின் கைக்கருவியாவது' என்று திரு செம்கோவ்ஸ்கி நமக்கு உறுதிபடச் சொல்கிறார். இது சிறுபிள்ளைத்தனமான மடமை. ஏனென்றால் இந்த **உரிமையை** அங்கீகரிப்பதாலேயே பிரிவினையை எதிர்த்துக் கருத்துப் பரப்புரையும் கிளர்ச்சிப் பரப்புரையும் செய்யக் கூடாது



படிப்பகம்

www.padippakam.com

என்பதோ முதலாளித்துவ தேசியவாதத்தை அம்பலப்படுத்தக் கூடாது என்பதோ இல்லவே இல்லை. ஆனால் பிரிந்து போகும் **உரிமையை** மறுப்பதுதான் **கடைக்கோடி பிற்போக்கு மாருஷ்ய** தேசியவாதத்தின் 'கைக்கருவியாவது' என்பதில் மறுப்புக்கு எள்முனையளவும் இடமில்லை!'' (அழுத்தம் லெனினது)

இங்கேயும் உரிமைக்கு லெனின் தருகிற அழுத்தம் கருத்துக்குரியது. சுயநிர்ணய உரிமையை சுயநிர்ணயமாகச் சுருக்கினால் இந்த அழுத்தம் பறந்து போகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

லெனின் சொல்கிறார் : [7]

''தொழிலாளி வர்க்கச் சனநாயகத்தின் தேசிய இன வேலைத் திட்டம் இதுதான் : எந்த ஒரு தேசத்துக்கும் அல்லது எந்த ஒரு மொழிக்கும் எவ்விதச் சிறப்புரிமைகளும் கூடவே கூடாது; **தேசங்களின் அரசியல் சுயநிர்ணயம், அதாவது அவை அரசுகளாகப் பிரிந்து செல்வது** என்னும் சிக்கலுக்கு முழுக்க முழுக்கச் சுதந்தரமான சனநாயக வழிமுறைகள் கொண்டு தீர்வு காணப்பட வேண்டும்;...'' (அழுத்தம் எனது.)

இதற்கு முன் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசும் போதெல்லாம் பிரிந்து போகும் உரிமையைக் குறித்துக் காட்டிய லெனின் இங்கே சுயநிர்ணயம் பற்றிப் பேசும் போது பிரிந்து செல்வதைக் குறித்துக் காட்டுகிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். சுயநிர்ணய உரிமை பிரிந்து செல்லும் உரிமையைக் குறிக்கிறது என்றால் சுயநிர்ணயம் என்னும் செயல் பிரிந்து செல்லும் செயலைக் குறிக்கிறது.

லெனின் சொல்கிறார் : [8]

''இதே போல் மாருஷ்ய மார்க்சியர் உக்ரேனியர்களுக்கு முழுமையான சமத்துவம் வேண்டும் என்ற கோரிக்கையையோ சுதந்தர அரசு அமைத்துக் கொள்ள அவர்களுக்குள்ள **உரிமையையோ** கண நேரம் காணத் தவறினாலும் கூட முதலாளித்துவ தேசியவாதத்தில் மட்டுமல்லாமல் கறுப்பு நூற்றுவரின் தேசியவாதத்துக்குள்ளும் மாட்டிக் கொள்வார்.'' (அழுத்தம் லெனினது)

இங்கேயும் உரிமைக்கு அழுத்தம் தருகிறார் லெனின். மாருஷ்ய மார்க்சியர் உக்ரைனியர்களுக்கு முழு சமத்துவம் கோர வேண்டும், சுதந்தர அரசமைக்கும் அவர்களது உரிமையை ஆதரிக்க வேண்டும். இந்த உரிமையை ஆதரிப்பது வேறு, சுதந்தர அரசு அமைப்பதற்கே ஆதரவு கொடுப்பது வேறு. இது நுட்பமான வேறுபாடுதான் என்றாலும் இன்றியமையாத வேறுபாடு. சுயநிர்ணயத்தையும் சுயநிர்ணய உரிமையையும் ஒன்றாக்கும் போது இந்த வேறுபாடு ஓடி ஒளிந்து கொள்கிறது.

லெனின் சொல்கிறார் : [9]

''...தேசங்களின் **சுயநிர்ணயம்** என்பது இந்தத் தேசங்கள் அயல் தேசிய அமைப்புகளிலிருந்து பிரிந்து சென்று சுதந்தர தேசிய அரசு அமைத்துக் கொள்வதையே குறிக்கும் என்ற முடிவுக்கு நாம் தவிர்க்க முடியாதவாறு வந்து சேர வேண்டும்.

''**சுயநிர்ணய உரிமை** என்பதற்குத் தனி அரசாக இருக்கும் உரிமை என்றல்லாமல் வேறெப்படி பொருள்விளக்கம் அளித்தாலும் தவறாகவே இருக்கும் என்பதற்கான வேறு காரணங்களைப் பிறகு பார்ப்போம்.'' (அழுத்தம் எனது)

லெனின் முதலில் சுயநிர்ணயம் பற்றிச் சொல்கிறார். பிறகு சுயநிர்ணய உரிமை பற்றியும் சொல்கிறார்.

சுயநிர்ணயத்தை அரசியல் வகையில் பிரிந்து சென்று தனி அரசு அமைக்கும் உரிமை என்று விளக்கப்படுத்துகிறார். சுயநிர்ணயம் என்பதைத் தனி அரசாக இருத்தல் என்று விளக்கப்படுத்துகிறார்.

லெனின் சொல்கிறார் : [10]

''மார்க்சியர்களின் வேலைத் திட்டத்தில் 'தேசங்களின் சுயநிர்ணயம்' என்பதற்கு வரலாற்றுப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் அரசியல் சுயநிர்ணயம், அரசு சுதந்தரம், தேசிய அரசு அமைத்தல் என்பதன்றி வேறெந்தப் பொருளும் இருக்க **முடியாது**.'' (அழுத்தம் லெனினது)

இதற்கு முன் சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போகும் உரிமையைக் குறிக்குமே தவிர உண்மையில் பிரிந்து போவதைக் குறிக்காது என்று வலியுறுத்திய லெனின் இங்கே அரசியல் சுயநிர்ணயம் என்பதற்கு சுதந்தர அரசு அமைத்தல் என்றே பொருள்விளக்கம் தருவது கவனத்துக்குரியது. லெனினது இந்த மேற்கோளில் சுயநிர்ணயம் என்பதை சுயநிர்ணய உரிமை என்று மாற்றிப் பாருங்கள், லெனினே லெனினை மறுத்துக் கொள்ளும் விபரீதம் விளையும்.

லெனின் சொல்கிறார் : [11]

''.... போலந்துக்குச் சுதந்தரம் வேண்டும் என்ற கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கையில் ரோசா லுக்சம்பர்க் 1898இல் அவர் எழுதிய சிறு வெளியீடு ஒன்றைக் குறிப்பிடுகிறார். அதில் அவர் போலந்தின் ஆலையுற்பத்திப் பண்டங்கள் ருஷ்யாவில் சந்தைப்படுத்தப்படுவதைக் காட்டி 'போலந்தின் தொழில்துறை வளர்ச்சி' துரிதமாக நடைபெறுவதை மெய்ப்பிக்கிறார். சுயநிர்ணய **உரிமை** என்னும் சிக்கல் குறித்து இதிலிருந்து எவ்வித முடிவுக்கும் வர முடியாது என்பதைக் கூறத் தேவையில்லை. நிலம் படைத்த கனவான்களுக்கும் இன்ன பிறருக்கும் உரியதாய் இருந்த பழைய போலந்து மறைந்து விட்டதையே இது மெய்ப்பிக்கிறது.'' (அழுத்தம் லெனினது)

இங்கேயும் சுயநிர்ணய **உரிமையை** லெனின் அழுத்தமாக வலியுறுத்துகிறார். இதையே தன்னுரிமை என்று எழுதினால் என்ன ஆகும்? அது சுயநிர்ணய உரிமையைக் குறிக்கிறதா, அல்லது சுயநிர்ணயத்தைக் குறிக்கிறதா என்று விளங்காமல் போய் லெனினது நோக்கம் சிதைவுறும்.

லெனின் சொல்கிறார் : [12]

''இந்தக் காரணத்தால்தான் பாட்டாளி வர்க்கம் எந்தத் தேசத்துக்கும் உத்தரவாதங்கள் வழங்காமலும், பிறிதொரு தேசத்தைப் பலியிட்டு எதுவும் தருவதாக உறுதியளிக்காமலும் சுயநிர்ணய **உரிமையை** அங்கீகரிக்க வேண்டும் என்ற எதிர்வகைக் கோரிக்கையோடு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறது எனலாம்.'' (அழுத்தம் லெனினது)

இங்கே சுயநிர்ணய உரிமைக்குத் தரப்படும் அழுத்தத்தோடு இன்னொன்றையும் கவனிக்க வேண்டும் : சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதற்கான கோரிக்கை ஒரு விதத்தில் எதிர்வகைக் கோரிக்கையே ஆகும். அதுவே ஒரு சமூகப் புரட்சிக்கான வேலைத் திட்டத்தின் மூலவுத்தியாக ஒரு போதும் அமையாது. அதனால்தான் சுயநிர்ணய உரிமை பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்த லெனின் எந்த இடத்திலும் 'சுயநிர்ணய உரிமைப் புரட்சி' என்பது போன்ற சொல்லாடல்களைப் பயன்படுத்தியதே இல்லை. உலகத்தில் இது வரை புரட்சி நடத்தியுள்ள எந்தப் பொதுவுடைமைக் கட்சியும் அந்தப் புரட்சிக்கு சுயநிர்ணய உரிமைப் புரட்சி என்று பெயர் சூட்டியதில்லை. தன்னுரிமைப் புரட்சி என்பதெல்லாம் பொருளற்ற சொல்லாடலே!

லெனின் சொல்கிறார் : [13]

''ஒடுக்கப்படும் தேசங்களின் முதலாளி வர்க்கமானது தன் கோரிக்கைகள் 'செயல்வழிப்பட்டவை' என்று சொல்லித் தன் விருப்பங்களை நிபந்தனையின்றி ஆதரிக்குமாறு பாட்டாளி வர்க்கத்தைக் கேட்கும். எல்லாத் தேசங்களுக்கும் பிரிந்து செல்லும் **உரிமை** உண்டு என்பதை ஆதரிப்பதற்குப் பதிலாக **குறிப்பிட்ட** ஒரு தேசம் பிரிந்து செல்வதை ஆதரித்துத் தெளிவாக 'சரி' சொல்வதுதான் மிகவும் செயல்வழிப்பட்டதாம்!'' (அழுத்தம் லெனினது)

பிரிந்து செல்வதும் பிரிந்து செல்வதற்கான **உரிமையும்** தெள்ளத் தெளிவாக இங்கே வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

லெனின் சொல்கிறார் : [14]

''நாம் நமது அரசியல் கிளர்ச்சிப் பரப்புரையில் பிரிந்து செல்லும் **உரிமை** என்ற முழக்கத்தை முன்னிறுத்தி வலியுறுத்தத் தவறுவோமானால், ஒடுக்கும் தேசத்தின் முதலாளி வர்க்கத்துக்கு மட்டுமல்லாமல் பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள், முழுமுதல் அதிகார ஆட்சியினர் ஆகியோருக்கும் கைக்கருவியாவோம்.'' (அழுத்தம் லெனினது)

லெனின் சொல்கிறார் : [15]

''போலந்தின் தேசியவாத முதலாளி வர்க்கத்துக்குத் '**துணை**' செய்து விடக் கூடாது என்ற கவலையில் ரோசா லுக்சம்பர்க் ருஷ்யாவில் மார்க்சியர்களின் வேலைத் திட்டத்தில் பிரிவினைக்கான **உரிமையை** மறுதலிப்பது **உண்மையில்** மாருஷ்யக் கறுப்பு நூற்றுவருக்குத் துணை செய்வதே ஆகும்.'' (அழுத்தம் லெனினது)

இங்கேயும் லெனின் உரிமைக்கு அழுத்தம் கொடுக்கக் காண்கிறோம். சுயநிர்ணய உரிமையை சுயநிர்ணயமாக்கி உரிமையை ஒழித்துக் கட்டுவதோ, தன்னுரிமையாக மாற்றி உரிமைக்குரிய தனி அழுத்தத்தைச் சிதைப்பது அல்லது எப்படியும் குறைப்பதோ லெனினைப் புரிந்து கொள்ளும் முறையன்று.

லெனின் சொல்கிறார் : [16]

''எடுத்துக்காட்டாக, உக்ரைன் சுதந்தர அரசு அமைத்துக் கொள்ள விதிக்கப்பட்டுள்ளதா என்பதை வருமுன்கூற முடியாத ஓராயிரம் காரணிகள் தீர்மானிக்கும். பயனற்ற '**ஊகங்கள்**' செய்ய முயலாமல், ஐயத்திற்கு இடமில்லாத ஒன்றை, அதாவது இப்படியோர் அரசு அமைக்க உக்ரைனுக்குள்ள உரிமையை நாம் உறுதியாக ஆதரிக்கிறோம்.'' (அழுத்தம் லெனினது.)

இங்கே உக்ரைனின் சுயநிர்ணய உரிமை என்பது அது ருஷ்யாவிலிருந்து பிரிந்து சென்று தனி அரசு அமைத்துக் கொள்ளும் உரிமையைக் குறிக்கிறதே தவிர அப்படித் தனி அரசு அமைத்துக் கொள்ளும் செயலைக் குறிப்பதன்று. சுயநிர்ணய உரிமை என்பது உரிமையைக் குறிக்கும். சுயநிர்ணயம் என்பது செயலைக் குறிக்கும். **'தன்னுரிமை' என்பதோ உரிமைக்கு உரிமையையும் செயலுக்கு செயலையும் காட்டும் விலாங்குத் தனத்தைக் குறிக்கும்.** ('தரம் தாழ்ந்த சொல்லாடல்' இல்லைதானே!)

லெனின் சொல்கிறார் : [17]

''....அரசியல் சுயநிர்ணய உரிமையை, அதாவது பிரிந்து செல்லும் உரிமையை ஏற்றுக் கொள்கிறீர்களா, இல்லையா என்ற வினாவிற்கு நேராக விடையளிப்பதைத் தட்டிக் கழிக்கவே திரு மொகிலியான்ஸ்கி முயல்கிறார் என்பது தெளிவாயிற்று.''

அரசியல் சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லும் உரிமை என்றால், அரசியல் சுயநிர்ணயம் என்பதென்ன? சுயநிர்ணய உரிமையும் சுயநிர்ணயமும் ஒன்றுதான் என்றால் பிரிந்து செல்லும் உரிமையும் பிரிந்து செல்லுதலும் ஒன்றுதான் என்றாகி விடாதா? இந்த வினாவிற்கு நேராக விடையளிக் காமல் தட்டிக் கழித்திட கி.வெ.க்குக் கிடைத்த 'தன்னுரிமை' மொகிலியான்ஸ்கிக்குக் கிடைக்காமல் போய் விட்டது!

லெனின் சொல்கிறார் : [18]

''சுயநிர்ணய உரிமையை, அதாவது பிரிந்து செல்வதற்கான உரிமையை ஆதரிப்பவர்கள் பிரிவினைவாதத்தை ஊக்கப் படுத்துகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவது மணமுறிவு உரிமையை ஆதரிப்பவர்கள் குடும்ப உறவுகள் அழிக்கப் படுவதை ஊக்கப்படுத்துகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவதைப் போலவே முட்டாள்தனமும் வஞ்சனையுமாகும்.''

மணமுறிவு வேறு, மணமுறிவு உரிமை வேறு! பிரிவினை வேறு, பிரிவினைக்கான உரிமை வேறு! இதை எல்லாம் கி.வெ. மறுக்க மாட்டார் என்பதில் ஐயமில்லை. ஆனால் சுயநிர்ணயம் வேறு, சுயநிர்ணய உரிமை வேறு என்பதை மட்டும் அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லையே ஏன்?

லெனின் சொல்கிறார் : [19]

''சோசலிஸ்டுகளின் கண்ணோட்டத்தில், தேசிய ஒடுக்குமுறை நிலவும் சூழலில் **தேசிய விடுதலைக் கடமைகளைக்** கண்டு கொள்ளாமல் இருப்பது தவறு என்பதில் ஐயமில்லை.'' (அழுத்தம் எனது)

தேசிய ஒடுக்குமுறைக்குத் தீர்வு தேசிய விடுதலைதான், வேறெதுவும் இல்லை. தேசிய விடுதலைக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்க சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு துணை செய்கிறது. ஆனால் இந்தக் கோட்பாடே ஒரு புரட்சியின் மைய வேலைத் திட்டம் ஆகாது. உலகில் எத்தனையோ தேசிய விடுதலைப் புரட்சிகள் நடந்துள்ளன, நடந்து கொண்டுமிருக்கின்றன. தமிழ்நாட்டில்தான், அதிலும் த.தே.பொ.க. மட்டும்தான் தன்னுரிமைப் புரட்சி என்று முழக்கம் கொடுக்கிறது.

சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை, சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்றெல்லாம் தக்க இடத்திலும் தக்க நேரத்திலும் சொல்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் **சுயநிர்ணய உரிமைப் புரட்சி (தன்னுரிமைப் புரட்சி) என்பது மட்டும் பொருந்தாச் சேர்க்கை!** எந்த இடத்திலும் எந்தக் கட்டத்திலும் அப்படிச் சொல்ல முடியாது. புரட்சி அத்தகையது! அதனோடு விளையாட (அதிலும் சொல்லெடுத்து விளையாட) எவர்க்கும் உரிமையில்லை.

ஏற்கெனவே (தோழர் இராஜிவிந்தனுக்கு எழுதிய மறுப்பில்) நான் சுட்டிக்காட்டியது போல, த.தே.பொ.க. கொள்கை அறிக்கையின் படி பார்த்தால் இந்தியாவில் - ஏன், உலகத்திலேயே - தமிழ்நாடு மட்டும்தான் தன்னுரிமைப் புரட்சி அல்லது தன்னுரிமைப் போராட்டத்திற்குரிய இடமாகக் கருதப்படுகிறது. (தமிழ்த் தேசம், 2000 ஏப்ரல்-மே.) கி.வெ.யும் இதை மறுக்கவில்லை.

லெனின் சொல்கிறார் : [20]

''**ருஷ்யா முழுவதிலும் உள்ள** மார்க்சியர்களும், அதிலும் முதலாவதாக மாருஷ்யர்களும் தேசங்கள் பிரிந்து செல்லும் **உரிமையை** ஏற்றுக் கொள்வது ஒரு குறிப்பிட்ட **ஒடுக்குண்ட** தேசத்தின் மார்க்சியர்கள் பிரிவினைக்கு எதிராகக் **கிளர்ச்சிப் பரப்புரை** செய்வதை எவ்விதத்தும் தடுப்பதாகாது என்பதைப் புரிந்து கொள்வது கடினமன்று. எப்படி மணமுறிவுக்கான உரிமையை ஏற்றுக் கொள்வது ஒரு குறிப்பிட்ட நேர்வில் மணமுறிவை எதிர்த்துப் போராடுவதைத் தடுப்பதாகாதோ, அதேபோலத்தான் இதுவும்.'' (அழுத்தம் லெனினது)

உரிமை பொதுவானது! செயல் குறிப்பானது! உரிமையை யும் செயலையும் ஒன்றாக்கிக் குழப்புவது தெளிவுக்கு உதவாது. 'தன்னுரிமை'யே இதற்குச் சான்று.

லெனின் சொல்கிறார் : [21]

''தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் வகையில் சுதந்தரம் பெறுவதற்கான உரிமையைத்தான், ஒடுக்கும் தேசத்திலிருந்து சுதந்தரமாக அரசியல் பிரிவினை பெறும் உரிமையைத்தான் குறிக்கிறது, வேறு எதையும் அன்று. குறிப்பாகச் சொன்னால் அரசியல் சனநாயகத்துக்கான இந்தக் கோரிக்கை பிரிவினைக்கும், பிரிவினை குறித்துப் பிரிந்து செல்லும் தேசம் பொது வாக்கெடுப்பு வாயிலாக முடிவு செய்வதற்கும் ஆதரவாகக் கிளர்ச்சி செய்ய முழு உரிமை இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆகவே இந்தக் கோரிக்கை பிரிந்து செல்வதற்கும் துண்டாடுவதற்கும் சிறு அரசுகளை அமைப்பதற்குமான கோரிக்கைக்கு நிகராகாது.''

இதிலிருந்து தெரிவதென்ன?

**'தன்னுரிமை' என்பதன் பொருள் சுயநிர்ணய உரிமைதான் என்றால் அது தமிழகத்திற்குத் தனி அரசு அமைப்பதைக் குறிக்காது, தன்னுரிமைக் கோரிக்கை தனியரசுக்**



படிப்பகம்

www.padippakam.com

**கோரிக்கைக்கு நிகராகாது.** அல்லது, நிகராகும் என்பதற்கு லெனின் சான்று தர மாட்டார் என்பதை உறுதிபடச் சொல்லலாம்.

தேசங்களின் சுயநிர்ணயம் தொடர்பாக மூன்று வகை நாடுகளை லெனின் பிரித்துக் காட்டுகிறார் : [22]

''முதலாவதாக, மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த முன்னேறிய முதலாளித்துவ நாடுகளும் அமெரிக்க ஐக்கிய நாடும். இந்த நாடுகளில் முற்போக்கு முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் நீண்ட காலம் முன்பே முடிவடைந்து விட்டன. இந்த 'மாபெரும்' தேசங்களில் ஒவ்வொன்றும் காலனிகளிலும் சரி, உள்நாட்டிலும் சரி, ஏனைய தேசங்களை ஒடுக்குகிறது. இந்த ஆளும் தேசங்களில் பாட்டாளி வர்க்கத்துக்குள்ள கடமைகளும் அயர்லாந்து தொடர்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பாட்டாளி வர்க்கத்துக்கிருந்த கடமைகளும் ஒன்றே.

''இரண்டாவதாக, கிழக்கு ஐரோப்பா : ஆஸ்திரியாவும், பால்கன் நாடுகளும், குறிப்பாக ருசியாவும். இங்கே இருபதாம் நூற்றாண்டுதான் முதலாளித்துவ சனநாயகத் தேசிய இயக்கங்கள் குறிப்பாக வளர்ச்சி பெறவும் தேசியப் போராட்டம் தீவிரமடையவும் கண்டது. இந்த நாடுகளில் முதலாளித்துவ சனநாயகச் சீர்திருத்தங்களை முழுமைப்படுத்துவதும் மற்ற நாடுகளில் சோசலிசப் புரட்சிக்குத் துணை செய்வதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளாகும். தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடாமல் இந்தக் கடமைகளை நிறைவேற்ற முடியாது. இதில் ஆகக் கடினமான, ஆக முக்கியமான கடமை ஒடுக்கும் தேசங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தை ஒடுக்குண்ட தேசத்திலுள்ள தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்துடன் ஒன்றுபடுத்துவதே ஆகும்.

''மூன்றாவதாக, சீனா, பாரசீகம், துருக்கி போன்ற அரைக் காலனி நாடுகளும் அனைத்துக் காலனி நாடுகளும். இவற்றின் மொத்த மக்கள்தொகை 100 கோடி ஆகும். இந்த நாடுகளில் முதலாளித்துவ-சனநாயக இயக்கங்கள் அவ்வளவாகத் தொடங்கவில்லை, அல்லது இன்னும் நெடுந் தொலைவு செல்ல வேண்டிய நிலையில் உள்ளன. சோசலிஸ்டுகள் நிபந்தனையற்ற முறையிலும் உடனடியாகவும் காலனி நாடுகள் இழப்பீடில்லாமல் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோர வேண்டும் - அரசியல் வகையில் இந்தக் கோரிக்கை சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்படுவதை அல்லாமல் வேறு எதையும் குறித்திடாது. அவர்கள் இந்த நாடுகளில் தேசிய விடுதலைக்கான முதலாளித்துவ-சனநாயக இயக்கங்களில் அதிகப் புரட்சிகரமான சக்திகளுக்கு உறுதியான ஆதரவும் தர வேண்டும், அந்நாடுகளை ஒடுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்கு எதிரான அச்சக்திகளின் எழுச்சிக்கு - அல்லது புரட்சிப் போர் நடந்தால் அப்போருக்கு - துணை செய்ய வேண்டும்.'' (அழுத்தம் லெனினது)

இந்த நீண்ட மேற்கோளிலிருந்து தெரிய வருவது என்ன? சுயநிர்ணய உரிமை என்பது மூவகை நாடுகளுக்குமே பொருந்தக் கூடியது. ஆனால் மூன்றாம் வகை நாடுகளில் மட்டுமே அது தேசிய விடுதலைப் போராட்டமாக உருவெடுக்கிறது. எனவேதான் முதலில் சொன்னேன், இப்போதும் சொல்கிறேன் : எல்லா தேசிய விடுதலைப் போராட்டங்களும் சுயநிர்ணயப் போராட்டங்களே. ஆனால் எல்லா சுயநிர்ணயப் போராட்டங்களும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் அல்ல. (தோழர் கி.வெ.க்காக இப்படியும் சொல்கிறேன் : எல்லா தேசிய விடுதலைப் போராட்டங்களும் 'தன்னுரிமை'ப் போராட்டங்களே. ஆனால் எல்லாத் 'தன்னுரிமை'ப் போராட்டங்களும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் அல்ல.)

சுயநிர்ணய உரிமை வேறு, சுயநிர்ணயம் வேறு, தேசிய விடுதலை வேறு என்பதைத் தோழர் லெனின் மேற்கோள்களைச் சான்றாகக் கொண்டு தெளிவுபடுத்தி விட்டதாக நம்புகிறேன். அப்படியானால் தோழர் கி.வெ. எடுத்துக்காட்டியுள்ள ஆதாரத்தின் பொருள் என்ன?

**''.... அன்னிய தேசிய அமைப்புகளிலிருந்து இத்தேசிய இனங்கள் அரசியல் ரீதியில் பிரிந்து சுதந்திரமான தேசிய அரசு ஒன்றை அமைத்தல் என்பதே தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருள்...'' என்று லெனின் கூறுவதில் சிக்கலுக்கு இடமேயில்லை.**

ஆனால் ''சுயநிர்ணய உரிமை என்பதற்குத் தனி அரசாக பிரிந்து வாழ்தல் என இன்றி வேறு பொருள் கூறுவது.... தவறானது'' என்று லெனின் கூறுவதை ஒட்டியே சிக்கல் எழுகிறது. இந்தக் கூற்றின் அடிப்படையில் சுயநிர்ணயமும் சுயநிர்ணய உரிமையும் ஒன்றுதான் என கி.வெ. வாதிடுகிறார்.

சுயநிர்ணயத்துக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் லெனின் ஒரேவிதமாக விளக்கமளிக்கிற வேறு சில இடங்களும் உண்டு.

எடுத்துக்காட்டாக அதே நூலில் லெனின் இப்படியும் சொல்கிறார் : [23]

''.....**அரசியல் சுயநிர்ணயம் என்பதன் பொருள் பிரிந்து சென்று சுதந்தர தேசிய அரசை அமைத்துக் கொள்ளும் உரிமையைத் தவிர வேறு எதையும் குறித்திட முடியாது** என்பதைத் தாம் செம்மையாகப் புரிந்து கொண்டிருப்பதைத் திரு கோக்கோஷ்கின் புலப்படுத்தினார்.'' (அழுத்தம் எனது.)

முதலில் சுயநிர்ணய உரிமையைத் தனி அரசாகப் பிரிந்து வாழ்தல் என்று விளக்கிய லெனின் இங்கே சுயநிர்ணயத்தைப் பிரிந்து சென்று தனி அரசு அமைக்கும் உரிமை என்று விளக்கக் காண்கிறோம்.

''தேசங்களின் அரசியல் சுயநிர்ணயம் என்னும் கோட்பாடு, அல்லது பிரிந்து செல்லும் உரிமை'' என்று இதே நூலில் பிறிதோர் இடத்தில் லெனின் குறிப்பிடுவதையும் காணலாம். [24]

சுயநிர்ணயமும் சுயநிர்யண உரிமையும் ஒன்றுதான் என்பதை இந்த லெனின் மேற்கோள்கள் மெய்ப்பிப்பதாக வைத்துக் கொண்டால் ஒரு சிக்கல் எழுகிறது.

சுயநிர்ணயம் வேறு, சுயநிர்ணய உரிமை வேறு என்பதற்குச் சான்றாக மேலே நாம் பார்த்த மேற்கோள்களுக்கு என்ன பொருள்? குறிப்பாக ஒன்றை மீண்டும் எடுத்துக்காட்டுகிறேன் : [25]

''..... தேசங்களின் **சுயநிர்ணயம்** என்பது இந்தத் தேசங்கள் அயல் தேசிய அமைப்புகளிலிருந்து பிரிந்து சென்று சுதந்தர தேசிய அரசு அமைத்துக் கொள்வதையே குறிக்கும்...''

''**சுயநிர்ணய உரிமை** என்பதற்குத் தனி அரசாக இருக்கும் உரிமை என்றல்லாமல் வேறெப்படிப் பொருள்விளக்கம் அளித்தாலும் தவறாகவே இருக்கும்...'' (அழுத்தம் எனது.)

இங்கே சுயநிர்ணயத்தையும் சுயநிர்ணய உரிமையையும் திட்டவட்டமாக வேறுபடுத்திக் காட்டும் லெனின் வேறு சில இடங்களில் இரண்டையும் ஒன்று போல் காட்டுவதால் எழும் 'முரண்பாட்டுக்கு' எவ்வாறு விளக்கமளிப்பது?

முன்பே தோழர் கி.வெ. எழுதிய **'தன்னுரிமைப் புரட்சி பொருளற்ற சொல்லாடலா?'** கட்டுரையை மறுத்து நான் எழுதிய **'தன்னுரிமை - சிறையா? விடுதலையா?'** கட்டுரையில் **(தமிழ்த் தேசம்** 2000 சனவரி - பிப்ரவரி) இந்த 'முரண்பாட்டுக்கு' நான் விளக்கமளித்துள்ளேன். அந்த விளக்கத்தை கி.வெ. கண்டு கொள்ளவே இல்லை. மீண்டும் அந்த விளக்கத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன் :

வாக்கு என்பது வாக்காளர்கள் தமக்கு விருப்பமான ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைத்தான் குறிக்கிறது என்று சொல்வதாலேயே வாக்கும் வாக்குரிமையும் ஒன்றாக மாட்டா.

மணமுறிவு என்பது ஒத்துப் போக முடியாத கணவனும் மனைவியும் தங்கள் உறவை முறித்துக் கொள்ளும்



படிப்பகம்

www.padippakam.com

உரிமையைத்தான் குறிக்கிறது என்று சொல்வதாலேயே மணமுறிவும் மணமுறிவு உரிமையும் ஒன்றாக மாட்டா.

இந்த ஏரணம் எதிர்த் திசையிலிருந்தும் பொருந்தக் கூடியதே-

வாக்குரிமை என்பது வாக்காளர்கள் தமக்கு விருப்பமான ஆட்சியைத் தேர்ந்தெடுப்பதைத்தான் குறிக்கிறது என்று சொல்வதாலேயே வாக்குரிமையும் வாக்கும் ஒன்றாக மாட்டா.

மணமுறிவு உரிமை என்பது ஒத்துப் போகாத கணவனும் மனைவியும் தங்கள் உறவை முறித்துக் கொள்வதைத்தான் குறிக்கிறது என்று சொல்வதாலேயே மணமுறிவு உரிமையும் மணமுறிவும் ஒன்றாக மாட்டா.

உரிமை செயலைக் குறிக்கலாம், செயல் உரிமையைக் குறிக்கலாம், ஆனால் செயலும் உரிமையும் ஒன்றாக மாட்டா. உரிமையின் பொருள் செயலாகவும் செயலின் பொருள் உரிமையாகவும் இருக்கலாம். அப்போதும் உரிமையும் செயலும் ஒன்றாக மாட்டா.

சுயநிர்ணயம் சுயநிர்ணய உரிமையையும், சுயநிர்ணய உரிமை சுயநிர்ணயத்தையும் குறிக்கும்படி லெனின் சொல்லக் கூடியவற்றை இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு மேற்கோளைத் தனித்து எடுத்து வைத்துக் கொண்டு அப்படியே சொல்லுக்குச் சொல் பொருள் காண்பதும், ஒரு நூல் அல்லது கட்டுரையின் சாரத்தைப் பற்றியும் அதில் அணிவகுக்கும் வாதங்களின் திசையழுத்தம் பற்றியும் கவலைப்படாமல் ஒற்றை வாக்கியத்தையோ ஒற்றைச் சொல்லையோ பற்றித் தொங்குவதுமான வாதமுறை என்பது லெனினைப் படிக்கிற முறையோ பயன்படுத்துகிற முறையோ அன்று.

மீண்டும் சொல்கிறேன் :

**சுயநிர்ணயம் என்பதும் சுயநிர்ணய உரிமை என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும்படியான இடங்கள் உண்டு.** (இத்தகைய இடங்களில் ஒன்றைத்தான் கி.வெ. சான்றாக எடுத்துக்காட்டுகிறார்.)

**ஆனால் இரண்டுக்கும் சேர்த்து 'தன்னுரிமை' என்ற ஒரே சொல்லைப் பயன்படுத்துவதற்கு இது போதுமானதன்று. எந்த இடத்திலும் எந்தச் சூழலிலும் இரண்டும் ஒரே பொருளைத் தந்தால் மட்டுமே இப்படி ஒரே சொல்லைப் பயன்படுத்த முடியும்.**

லெனினோ மற்றவர்களோ சுயநிர்ணயம் என்பதற்கும் சுயநிர்ணய உரிமை என்பதற்கும் ஒரே சொல்லைப் பயன்படுத்தவில்லை என்ற எளிய உண்மையே அவர்கள் அவ்விரண்டையும் வெவ்வேறாகக் கருதினர் என்பதற்குப் போதிய சான்றாகும். ஒருசில இடங்களில் அவர்கள் அவ் விரண்டையும் ஒன்றுக்கொன்று மாற்றீடாகப் பயன்படுத்தினார் கள் என்பது இந்தச் சான்றை இம்மியளவும் அசைத்திட முடியாது.

சரி, சுயநிர்ணயமும் சுயநிர்ணய உரிமையும் முழுக்க முழுக்க ஒன்றுதான் என்று உண்மையிலேயே கி.வெ. நம்புகிறாரா? அவர் சார்ந்த தமிழ்ச் தேச பொதுவுடைமைக் கட்சியின் உறுதியான நிலைப்பாடு அதுதானா? இல்லை என்பதற்குத் த.தே.பொ.க. கொள்கை அறிக்கையே சான்று. கொள்கை அறிக்கையின் ஆறாவது பிரிவு (தமிழகத்தில் தன்னுரிமைக் குரல்) இப்படிச் சொல்கிறது :[26]

''இந்திய விடுதலைப் போராட்டம் வலுப்பெற, வலுப்பெற 'இந்தியத் தேசியம்' என்ற கருத்து உறுதிப்பட்டது. இன்னொரு புறம் அதற்கு மாற்றாக, தேசிய இனங்களின் சுயநிர்ணயக் கோரிக்கையும், சுயஆட்சிக் கோரிக்கையும் வலுப்பெற்றன. முஸ்லீம் லீக் தலைமையில் பாகிஸ்தான் கோரிக்கைக்கான போராட்டங்கள் எழுந்தன. சீக்கியரிடையேயும் சுயநிர்ணயக் குரல் ஒலித்தது. 1938இல் பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முழங்கினார்.

''அதிகார மாற்றம் குறித்த விவாதம் இந்தியாவெங்கும் நடந்து கொண்டிருந்த போதே தமிழ்த் தேசத்தில் **'தன்னுரிமை' (சுயநிர்ணய உரிமை)** கோரிக்கையும் முன்வந்தது. 1946 இறுதியில் தமிழரசுக் கழகத்தின் முயற்சியில் இந்தியக் கூட்டாட்சியில் **தன்னுரிமை** உள்ள தமிழகக் குடியரசு அமைப்பதற்கு உரிமை வேண்டும் என்ற கூட்டறிக்கை வெளியிடப்பட்டது...'' (அழுத்தம் எனது.)

இது ஒரு மேடைப் பேச்சோ அல்லது பத்திரிகைக் கட்டுரையோ கூட அன்று, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கை அறிக்கை! இந்தக் கொள்கை அறிக்கையை வரைந்தவர்களில் கி.வெ.யும் ஒருவராய் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, கட்சியின் மாநாடு தேர்ந்து தெளிந்து நிறைவேற்றிய அறிக்கை இது.

**இந்த அறிக்கை சுயநிர்ணயத்தை சுயநிர்ணயம் என்றே சொல்கிறது. சுயநிர்ணய உரிமையைத்தான் 'தன்னுரிமை' என்கிறது.** இதில் எவ்வித ஐயத்துக்கும் இடம் வைக்காமல் அடைப்புக் குறியில் விளக்கமும் தருகிறது.

எப்படியும் ஒன்று தெளிவாகிறது : 'தன்னுரிமை' என்ற சொல்லாட்சியில் த.தே.பொ.க.விற்கே முழுமையான தன்னம்பிக்கை இல்லை. தடுமாற்றத்துடன்தான் அது 'தன்னுரிமை'க்கு வர வேண்டியுள்ளது.

தோழர் கி.வெ. கழுத்தளவுக் குழப்பத்தில் நின்றுகொண்டு தான் எனக்கு இருக்கும் **''குழப்பத்தை விளக்கி''** கட்டுரை எழுதியதாகப் பெருமைபட்டுக் கொள்கிறார். தன் தடுமாற்றத்தை மறைத்துக் கொண்டுதான் **''விவாத சுகம்''** காணும் போக்கை நம்மிடம் கண்டுபிடித்துத் துன்பப்படுகிறார். கருத்து வறட்சியில் தவித்துக் கொண்டுதான் **''வழங்குவதற்கு 'சரக்கு' ஏதும்''** நம்மிடம் இல்லை என்று பரிதாபப்படுகிறார்.

தோழர் கி.வெ. சொல்கிறார் :

''இங்கு 'சுயநிர்ணயம்', 'சுயநிர்ணய உரிமை' ஆகிய இரண்டுமே 'தனி அரசு அமைத்தல்' என்ற ஒரே பொருளைக் குறிப்பதாக லெனின் கூறுவது கவனிக்கத்தக்கது.''

நன்று தோழரே, சுயநிர்ணயமும் சுயநிர்ணய உரிமையும் ஒன்றுதான்! இரண்டுக்கும் ஒரே பொருள்தான்! 'தனி அரசு அமைத்தல்' என்பதுதான் அந்த ஒரே பொருள்! லெனினே இதைச் சொல்லி விட்டார்! அதாவது தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தமிழ்த் தேசத் தன்னுரிமைக்காகப் போராடுகிறது என்றால் அது லெனின் வழியில் தமிழ்த் தேசத் தனி அரசு அமைப்பதற்காகவே போராடுகிறது என்று பொருள்!

சுயநிர்ணயம் என்பது கூட்டரசு, தன்னாட்சி, தனி அரசு என்ற பலவற்றைக் குறிக்கும் என்பது தியாகுவின் திரிபு வேலை! மொழிபெயர்ப்பு விளையாட்டு! சுயநிர்ணயம் என்பது பொதுவானது, அதில் குறிப்பான ஒரு வழி மட்டுமே தனி அரசு அமைப்பதாகும் என்று தியாகு சாதிப்பது லெனினுக்கே எதிரானது! தூலமான வடிவத்தில் சுயநிர்ணயம் என்பதற்குத் தனி அரசு என்ற ஒரே ஒரு பொருள்தான் உண்டு! இதுவே லெனின் சொல்லும் பேருண்மை!

இந்த விவாதத்தில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் என்ன சொல்கிறார் பார்ப்போம்.

பெ.ம. சொல்கிறார் :[27]

**''தன்னுரிமை என்பது அடிமரம், அதில் இரண்டு கிளைகள். ஒன்று ஒரு தேசிய இனம் பிற தேசிய இனங்களுடன் சமத்துவத்துடன் கூட்டாட்சியில் சேர்வது. மற்றொன்று ஒரு தேசிய இனம் தனி நாடு அமைத்துக் கொள்வது. எனவே விடுதலை என்பது தன்னுரிமையில் ஓர் உறுப்பே தவிர அது தன்னுரிமையிலிருந்து வேறுபட்ட**



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றல்ல. தன்னுரிமைதான் ஒரு தேசிய இனத்தின் தாயுரிமை. **தன்னுரிமையைச் செயல்படுத்தும் போது கூட்டாட்சியா, தனிநாடா என்ற கேள்வி** வருகிறது.'' (அழுத்தம் எனது)

தியாகு செய்யும் அதே திரிபு வேலையை பெ.ம.வும் செய்கிறாரே, என்ன செய்யப் போகிறார் கி.வெ.?

''**தன்னுரிமையைச் செயல்படுத்தும் போது**'' என்று பெ.ம. சொல்லும் போதே அது உரிமைதானே தவிர செயலன்று என்பதை ஏற்றுக் கொண்டு விடுகிறார்.

லெனின் கருத்து என்ன என்பதைப் பெ.ம. இப்படிச் சொல்கிறார் : [28]

''பிரிந்து போகும் உரிமையுள்ள தன்னுரிமையைத்தான், அதாவது சுயநிர்ணய உரிமையைத்தான் லெனின் குறிப்பிடு கிறார். **பிரிந்து தனி நாடு அமைத்துக் கொள்வதும், சமத்துவத்துடன் கூட்டாட்சியில் இருப்பதும் குறிப்பிட்ட நிகழ்ச்சிப் போக்கைச் சார்ந்திருக்கிறது.** பாட்டாளி வர்க்கம் ஒரு தேசிய இனம் பிரிந்து போவதை ஆதரிப்பதா வேண்டாமா என்பதை **குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் உள்ள நிலைமை களை வைத்துதான் முடிவு செய்ய வேண்டும்** என்றார்.'' (அழுத்தம் எனது.)

இப்போது சொல்லுங்கள், எது லெனின் கருத்து? கி.வெ.யின் விளக்கமா? அல்லது பெ.ம.வின் விளக்கமா?

பெ.ம. பேசுவது அருவ நிலை குறித்தா? தூல நிலை குறித்தா? எது அருவம்? எது தூலம்? சொல்லுங்கள், கி.வெ.!

தன்னுரிமைப் புரட்சி, விடுதலைப் புரட்சி இரண்டும் ஒன்றுதான் என்று கி.வெ. திட்டவட்டமாக அறிவிக்கிறார். ஆனால், **''விடுதலை என்பது தன்னுரிமையில் ஓர் உறுப்பே''** என்பது பெ.ம.வின் நிலைப்பாடு. மரமும் கிளையும் ஒன்றுதான், உடலும் உறுப்பும் ஒன்றுதான், தாயும் பிள்ளையும் ஒன்றுதான் என்று கி.வெ. வாதிடா விட்டால் சரி!

தன்னுரிமை என்பது தமிழகச் சூழலில் தனி அரசைத்தான் குறிக்கிறதா? தன்னுரிமைப் புரட்சி என்பது விடுதலைப் புரட்சியைத்தான் குறிக்கிறதா? இந்த வினாக்களுக்கு கி.வெ. தரும் விடை ''ஆம்'' என்பதே.

ஆனால் பெ.ம. வேறுவிதமாகச் சொல்கிறார் : [29]

''இறையாண்மை உள்ள தமிழ்த் தேசக் குடியரசு நிறுவுவதுதான் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய தமிழ்த் தேசத்திற்குத் தன்னுரிமை வேண்டும்.

''இதன் முதல் நடவடிக்கையாக இந்திய அரசமைப்புச் சட்டத்தை முற்றாகத் தூக்கி எறிந்து விட்டு தேசிய இனங்களுக்கு இடையில் புதிய ஒப்பந்தம் கோருகிறது. த.தே.பொ.க. பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை பெற்ற இறையாண்மை உள்ள தேசங்களின் கூட்டமைப்பாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்கிறது.

''இந்திய அரசு தமிழ்த் தேசத்தின் மேற்கண்ட அரசியல் கோரிக்கையை ஏற்காமல் மேலும் ஒடுக்கும் நிலை தொடர்ந்தால் அது தனி நாடாகப் போகும். ஆக தன்னுரிமை பெறுவது என்பது தில்லியைக் கைப்பற்றுவது அல்ல; தில்லியின் ஆதிக்கத்தி லிருந்து விடுபடுவது.

''தில்லி ஆட்சியாளர்கள் தன்னுரிமை வழங்குவார்கள் என்ற 'பிரமை' இருக்கிறதா என்று கேட்கிறார்கள். த.தே.பொ.க. விற்குப் பிரமை இல்லை. தமிழர்களுக்கு இன்னும் தில்லிப் பிரமை இருக்கிறதே. இந்தச் சூழ்நிலையில் **தன்னுரிமையில் உள்ள குறைந்தபட்சக் கோரிக்கையை - புதிய ஒப்பந்தம் செய்து கொண்டு புதிய இந்தியக் கூட்டமைப்பை உருவாக்குவது என்ற குறைந்தபட்சக் கோரிக்கையைத்** த.தே.பொ.க. முன்வைக்கிறது.

''குறைந்தபட்சக் கோரிக்கைக்கு மறுக்கப்பட்டு, ஒடுக்கு முறை தீவிரப்பட்டால் **அதிகபட்சக் கோரிக்கைக்கு,** அதாவது தனி நாட்டிற்குத் தமிழர்களும் அணியமாவார்கள். இரண்டில் **எதைத் தேர்ந்தெடுப்பதற்கும் தன்னுரிமையே வழி திறந்து** விடுகிறது.'' (அழுத்தம் எனது.)

ஆக, கி.வெ. ஒரு விரல் காட்டுகிறார், பெ.ம. இரு விரல் காட்டுகிறார். ஆனால் இருவருமே 'தன்னுரிமை' என்கிறார்கள்.

தன்னுரிமை என்றாலே தனி அரசுதான், தன்னுரிமைப் புரட்சி என்றாலே விடுதலைப் புரட்சிதான் என்ற கி.வெ.யின் வாதத்திற்குப் பெ.ம.வின் வாதங்கள் ஆதரவாக இல்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

(புரட்சிக்கான மூலவுத்தியில் குறைந்தபட்சக் கோரிக்கை, அதிகபட்சக் கோரிக்கை என்று இரு வழிகள் வைத்துக் கொள்வதற்கு இடம் உண்டா என்பதைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.)

கடைசியாக ஒன்று. தேசிய விடுதலைப் புரட்சி என்றோ தேசிய சனநாயகப் புரட்சி என்றோ வரையறை செய்யாமல் 'தன்னுரிமைப் புரட்சி' என்று முழங்குவது ஏன் என்ற என் கேள்விக்கு கி.வெ. பின்வருமாறு விடையளிக்கிறார் :

''இங்கு **மக்கள் மனநிலை - உணர்வு மட்டம்** என்பதுதான் நாம் முன்வைக்கும் முழக்கத்தைத் தீர்மானிக்கிறது.

''தன்னுரிமை, விடுதலை இரண்டுமே இறையாண்மையைக் குறிக்கிற போது, இன்றைய நிலையில் எதை முன்வைப்பது **வெகுமக்களை அணிதிரட்ட** உதவும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

''அந்த வகையில் தீர்மானிக்கப்பட்டு முன்வைக்கப்படுவது தான் தன்னுரிமை முழக்கம்.'' (அழுத்தம் எனது.)

தோழரே, மக்கள் மனநிலை - உணர்வு மட்டம் தேசிய விடுதலைக்கு ஆதரவாக இல்லை, தன்னுரிமைக்கே ஆதரவாக இருக்கிறது என்று நீங்கள் தீர்மானிப்பதற்கான அளவுகோல் என்ன? தன்னுரிமை முழக்கத்தைக் கொண்டு வெகுமக்களை அணி திரட்டும் முயற்சியில் நீங்கள் பெற்றுள்ள அனுபவத்தின் சாரம் என்ன?

எது எப்படியானாலும், தோழர் கி. வெங்கட்ராமன் அவர்களே, உங்கள் குழப்பத்துக்கும் தடுமாற்றத்துக்குமான பழியைத் தமிழ் மக்கள் மீது சுமத்த முயலாதீர்கள்!

'தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை' என்ற நூலை லெனின் முடித்தது போலவே நானும் இந்தக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன் :

**''சிலர் 'மறுத்துரைக்க' வேண்டுமென விரும்புவார்; ஆனால் எப்படி, ஏன், என்ன காரணத்துக்காக என்பதை அறியார்.''**

★

**பின்குறிப்புகள் :**

1. "But there is *one case* in which the *Marxists* are duty *bound*, if they do not want to betray democracy and the proletariat, to defend one special demand in the national question; that is, the *right* of nations to self-determination (para 9 of the R.S.D.L.P. Programme ), i.e., the right to political secession. " (Lenin, The National programme of the R.S.D.L.P., Questions of National Policy and Proletarian Internationalism, page 7-8.)
2. "The *right* to self-determination, my dear Mr.Liquidator, certainly does *not* imply the solution of the problem by a central parliament, but by a parliament, a Diet, or a referendum of the *seceding minority*." (*Ibid*, p.8.)
3. "In order not to infringe on the right to self-determination, therefore, we are duty bound *not* 'to vote for secession', as the wily Mr.Semkovsky assumes, but to vote for the right of the seceding region to decide the question itself. " (*Ibid*, p.9.)



படிப்பகம்

www.padippakam.com

4. "It would seem that even with Mr.Semkovsky's mental abilities it is not difficult to deduce that 'the *right* to divorce' does not require that one should vote for divorce!" (*Ibid*, p.9.)
5. "Swedish nationalist democrats could refrain from a type of agitation that the principle of the right to self-determination demands of the proletariat of *ruling, oppressor nations*." (*Ibid*, p.9.)
6. "The recognition of the right to self-determination is, Mr. Semkovsky assures us, 'playing into the hands of the most through-paced bourgeois nationalism'. This is childish nonsense since the recognition of the *right* does not exclude either propaganda and agitation *against* separation or the exposure of bourgeois nationalism. But it is absolutely indisputable that the denial of the *right* to secede is 'playing into the hands' of the *most though-paced reactionary Great-Russian* nationalism!" (*Ibid*, p.10.)
7. "The national programme of working-class democracy is: absolutely no privileges for any one nation or any one language; the solution of the problem of the political self-determination of nations, that is, their separation as states by completely free, democratic methods; ..." (Critical Remarks On The National Question. (*Ibid*, p.15.)
8. "Similarly, the Great-Russian Marxist will be bogged down, not only in bourgeois, but also in Black-Hundred nationalism, if he loses sight, even for a moment, of the demand for complete equality for the Ukrainians, or of their *right* to form an independent state." (*Ibid*, p.26.)
9. "... we must inevitably reach the conclusion that the self-determination of nations means the political separation of these nations from alien national bodies, and the formation of an independent national state.

   "Later on we shall see still other reasons why it would be wrong to interpret the right to self-determination as meaning anything but the right to existence as a separate state." (Lenin, The Right Of Nations To Self-Determination, Selected Works, Moscow 1970, Volume 1, Page 598-99.)
10. "It means that 'self-determination of nations' in the Marxists' Programme *cannot*, from a historico- economic point of view, have any other meaning than political self-determination, state independence, and the formation of a national state." (*Ibid*, p.601.)
11. "... In protesting against the demand for the independence of Poland, Rosa Luxemburg refers to a pamphlet she wrote in 1898, proving the rapid 'industrial development of Poland', with the latter's manufactured goods being marketed in Russia. Needless to say, no conclusion whatever can be drawn from these on the question of the *right* to self-determination; it only proves the disappearance of the old Poland of the landed gentry, etc." (*Ibid*, p.603-04.)
12. "That is why the proletariat confines itself, so to speak, to the negative demand for recognition of the *right* to self-determination, without giving guarantees to any nation, and without undertaking to give *anything at the expense* of another nation." (*Ibid*, p.609.)
13. "On the plea that its demands are 'practical', the bourgeoisie of the oppressed nations will call upon the proletariat to support its aspirations unconditionally. The most practical procedure is to say a plain 'yes' in favour of the secession of a particular nation rather than in favour of all nations having the right to secede!" (*Ibid*, p.610.)
14. "If, in our political agitation, we fail to advance and advocate the slogan of the *right* to secession, we shall play into the hands, not only of the bourgeoisie, but also of the feudal landlords and the absolutism of the *oppressor* nation." (*Ibid*, p.611.)
15. "When, in her anxiety not to 'assist' the nationalist bourgeoisie of Poland, Rosa Luxemburg rejects the *right* to secession in the programme of the Marxists *in Russia*, she is *in fact* assisting the Great-Russian Black Hundreds." (*Ibid*, p.611.)
16. "Whether the Ukraine, for example, is destined to form an independent state is a matter that will be determined by a thousand unpredictable factors. Without attempting idle *'guesses'*, we firmly uphold something that is beyond doubt: the right of the Ukraine to form such a state." (*Ibid*. p.612.)
17. "It was obvious that Mr. Mogilyansky was trying to evade a direct reply to the question whether or not he recognized the right to political self-determination, i.e. to secession." (*Ibid*, p.615.)
18. "To accuse those who support freedom of self-determination, i.e., freedom to secede, of encouraging separatism, is as foolish and hypocritical as accusing those who advocate freedom of divorce of encouraging the destruction of family ties." (*Ibid*, p.620.)
19. "From the socialists' point of view it was undoubtedly a mistake to ignore the tasks of national liberation in a situation where national oppression existed." (*Ibid*, p.628.)
20. "It is not difficult to understand that the recognition by the Marxists of the *whole of Russia*, and first and foremost by the Great-Russians, of the *right* of nations to secede in no way precludes *agitation* against secession by Marxists of a particular *oppressed* nation, just as the recognition of the right to divorce does not preclude agitation against divorce in a particular case." (*Ibid*, p.644-45, footnote.)
21. "The right of nations to self-determination implies exclusively the right to independence in the political sense, the right to free political separation from the oppressor nation. Specifically, this demand for political democracy implies complete freedom to agitate for secession and for a referendum on secession by the seceding nation. This demand, therefore, is not the equivalent of a demand for separation, fragmentation and the formation of small states." (Lenin, The Socialist Revolution And The Right Of Nations To Self-Determination, Questions Of National Policy And Proletarian Internationalism, page 113.)
22. "First, the advanced capitalist countries of Western Europe and the United States. In these countries progressive bourgeois national movements came to an end long ago. Every one of these 'great' nations oppresses other nations both in the colonies and at home. The tasks of the proletariat of these ruling nations are the same as those of the proletariat in England in the nineteenth century in relation to Ireland.

"Secondly, Eastern Europe: Austria, the Balkans and particularly Russia. Here it was the twentieth century that particularly developed the bourgeois-democratic national movements and intensified the national struggle. The tasks of the proletariat in these countries both in completing their bourgeois - democratic reforms, and rendering assistance to the socialist revolution in other countries, cannot be carried out without championing the right of nations to self-determination. The most difficult and most important task in this is to unite the class struggle of the workers of the oppressor nations with that of the workers of the oppressed nations.

"Thirdly, the semi-colonial countries, such as China, Persia and Turkey, and all the colonies, which have a combined population of 1000 million. In these countries the bourgeois-democratic movements either have hardly begun, or have still a long way to go. Socialists must not only demand the unconditional and immediate liberation of the colonies without compensation and this demand in its political expression signifies nothing else than the recognition of the right to self determination; they must also render determined support to the more revolutionary elements in the bourgeois-democratic movements for national liberation in these countries and assist their uprising - or revolutionary war, in the event of one - *against* the imperialist powers that oppress them. (*Ibid*, p.118-19.)


23. "Mr. Kokoshkin showed that he understood perfectly well that political self-determination can mean nothing else but the right to secede and form an independent national state." (Lenin, Selected Works, Volume 1, page 618.)
24. "... The principle of political self-determination of nations, or the right to secede..." (*Ibid*, p.629.)
25. பார்க்கவும் : குறிப்பு எண் 9
26. தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி கொள்கை அறிக்கை, இரண்டாம் பதிப்பு, பக்கம் 6.
27. பெ. மணியரசன், 'தமிழ்த் தேசியம் : புதிய கேள்விகள்' தொகுப்பில் 'தன்னுரிமை : புரட்சிகர முழக்கமா? சட்டவாதமா?', பக்கம் 54.
28. மேலது, பக்கம் 55.
29. மேலது, பக்கம் 59, 60.
30. Lenin, Selected Works, Volume 1, P - 647. ●



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ்த் தேசப் பாட்டு



கேட்கவில்லை
  தாலாட்டு

தொலைந்தது
  கதைப் பாட்டு

காணவில்லை
  கும்மிப் பாட்டு

தூர்ந்தது
  ஏற்றப் பாட்டு

மடிந்தது
  உழவுப் பாட்டு

புதைந்தது
  நடவுப் பாட்டு

வறண்டது
  வயல் பாட்டு

*

கரைகளில்
  அகதிப் பாட்டு

கடலலையில்
  குருதிப் பாட்டு

களத்தினில்
  துமுக்கிப் பாட்டு

கனிகிறது
  ஈழப் பாட்டு

அழித்தொழிக்கு
  அடிமைப் பாட்டு

எழுது, எழுது
  எழுச்சிப் பாட்டு

எழுந்து வரும்
  தமிழ்த்தேசப் பாட்டு

– *திருவைக்குமரன்.*

## பொதுக் கூட்டம்

சென்னை கிண்டியில் ஐ.ஐ.டி. எனப்படும் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் சமுகநீதிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் எதிராகச் சாதி வெறியுடன் செயல்படும் பார்ப்பன இயக்குநர் நடராசனுக்கு தில்லி பா.ச.க. அரசு மேலும் ஈராண்டு பதவி நீட்டிப்பு தந்துள்ளதை நீக்கம் செய்யக் கோரி சென்ற மார்ச்சு 31 மாலை சைதாப்பேட்டையில் பெரியார் தி.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. பழ. நெடுமாறன், தோழர் தியாகு, விடுதலை இராசேந்திரன், மு. மதி பறையனார், நுங்கை பாபு, சக்திவேலு, எஸ். நடராசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

## "சிதைந்த கூடு"



*ஓவியர் கு. புகழேந்தி, குஜராத் நிலநடுக்கப் பேரழிவுகளை 150 அடி நீளத் தொடர் ஓவியமாக்கி அதற்கு "சிதைந்த கூடு" என்று தலைப்பிட்டுள்ளார்.*

*அந்த ஓவியக் கண்காட்சி முதல் மொழிப் போரின் முதல் சர்வாதிகாரி திரு செ.தெ. நாயகம் அவர்கள் நிறுவிய தியாகராய நகர் மேல்நிலைப் பள்ளியில் 17.2.2001 முதல் 24.2.2001 வரை நடந்தது.*

## அம்பத்தூருக்கு வேண்டும் அரசுப் பொது மருத்துவமனை!

அம்பத்தூரில் அரசுப் பொது மருத்துவமனை அமைக்கக் கோரி, சென்ற மார்ச்சு 24ஆம் நாள் அம்பத்தூர் பேருந்து நிலையத்தில் தமிழ் தமிழர் இயக்கம் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தியது. இந்தக் கூட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சியினரும் வணிகர் சங்கத்தினரும் கலந்து கொண்டு கோரிக்கையை வலியுறுத்தினர். தோழர் தியாகு நிறைவுரை ஆற்றினார்.


வடபழனியில்
புதிய புத்தகச் சந்தை

**தமிழ் முழக்கம்**

குறுந்தகடு, ஒலிநாடா, நூல்கள் விற்பனையகம்

தமிழ்த் தேசியம், பெண்ணியம், பெரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம், தலித்தியம் தொடர்பான நூல்களும் பொதுவான அனைத்து நூல்களும் கிடைக்கும்.

*முகவரி :*
2/66, நூறடிச் சாலை,
வடபழனி, சென்னை - 26.




படிப்பகம்

www.padippakam.com

# போரா? சமாதானமா? எது வேண்டும் சொல் பகையே!



சீனப் புரட்சியில் ஒரு போது தோழர் மாவோ சொன்னார்: நம்மிடம் இரு கைகள் உள்ளன. ஒன்றைப் போருக்கும் மற்றொன்றை சமாதானத்திற்கும் உயர்த்துகிறோம். எது வேண்டும் என்று பகைவனே தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்!

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுப் பேரவையில் உரையாற்றியபோது பாலத்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாசர் அராபத் சொன்னார் : நான் ஒரு கையில் துப்பாக்கியோடும் மறு கையில் சமாதான அடையாளமாகிய ஆலிவ் கிளையோடும் வந்துள்ளேன்.

இப்போது தமிழீழத் தலைவர் பிரபாகரனும் இதையேதான் சொல்கிறார் : போரா? சமாதானமா? எது வேண்டும் சொல் பகையே! போர் என்றால் போர்! சமாதானம் என்றால் சமாதானம்!

ஆம். சென்ற திசம்பர் 24 தொடங்கி ஏப்ரல் 24 வரை விடுதலைப் புலிகள் தாமாகவே ஒரு தரப்பாகப் போர் நிறுத்தம் அறிவித்துச் செயல்படுத்தினார்கள். ஆனால் சந்திரிகாவின் சிங்களப் பேரினவாத அரசு போர் நிறுத்தம் செய்ய மறுத்து விட்டது. அமைதியையும் அரசியல் தீர்வையும் நாடுகிறவர்கள் யார்? போர் வெறி கொண்டு இராணுவத் தீர்வு காணத் துடிப்பவர்கள் யார்? என்பதை உலகம் கண்டது.

ஏப்ரல் 24க்குப் பிறகு போர் நிறுத்தம் தொடராது என்று புலிகள் அறிவித்துவிட்ட நிலையில் சிங்களப் படை ஆனையிரவைத் திரும்பக் கைப்பற்றும் கனவோடு தீச்சுவாலை என்று பெயர் சூட்டிய புதிய தாக்குதலைத் தொடங்கியது. இரண்டு நாள் வரை சிங்களப் படை முன்னேறியும் சென்றது. பிறகுதான் புலிகளின் பதிலடி வந்தது. அடி என்றால் செமையடி!

சிங்களப் படையினர் 400 பேர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் 75 பேர் வீரச் சாவடைந்தனர். தீச்சுவாலை அணைந்து போயிற்று.

விழுந்த உதையில் பணிந்து பேசியது சிங்களம். புலிகளைப் பேச்சுக்கு அழைத்தது.

இத்துணைக் காலமும் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பைக் கண்டுகொள்ளாமல் வாய்மூடிக் கிடந்த தில்லி அரசு - சிங்களப் போர் நடவடிக்கைகளைக் கண்டிப்பதற்கு மாறாக, மறைமுகமாய் ஆதரித்துத் துணை செய்த இந்திய அரசு - சிங்களப் படையை நிர்மூலமாக்கிப் புலிகள் தங்கள் வலிமையை மீண்டும் மெய்ப்பித்தவுடனே அவசரமாய்க் கவலை தெரிவித்தது: இனியும் இரத்தம் சிந்தக் கூடாதாம், உயிர்கள் இழக்கக் கூடாதாம்!


சிங்கள இரத்தம் என்றும் சிங்கள உயிர்கள் என்றும் வெளிப்படையாகச் சொல்லாத குறைதான்!

- சுதா



படிப்பகம்

www.padippakam.com



# குறுக்கு விசாரணைக் கூண்டில் துக்ளக் 'சோ'



படிப்பகம்